# நக்கல் நமசிவாயம்

வீட்டு வேலையள செய்ய புருசன்மார பழக்கிப்போட்டதால, மனுசன்மாரிட வோர்க் ப்ரொம் ஹோம் எண்ட சிஸ்டம் நீடிக்கவேணுமெண்டுதான் நிறைய பொம்பிளையள் விரும்புகின பாருங்கோ...




# தமிழன்

Follow us:

THAMILAN தமிலன்

தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்

மலர் : 01, இதழ் : 256 பிலவ வருடம், ஆனி மாதம் 02ஆம் திகதி புதன்கிழமை (16.06.2021) ஹிஜ்ரி - 1442, ஜில்ஹாயிதா பிறை - 04, 0115886187 - பக்கங்கள் 08

விலை ரூ.30




02

## பேக்கரி பண்டங்களின் விலைகளில் அதிகரிப்பு

## அவசரமாக நாடு திரும்பும் பசில்



அமெரிக்கா சென்றுள்ள ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியின் தேசிய அமைப்பாளர் பசில் ராஜபக்ஷ எதிர்வரும் 23ஆம் திகதி நாடு திரும்பவுள்ளார் .

தனிப்பட்ட பயணம் மேற்கொண்டு அமெரிக்கா சென்றிருந்த பசில் ராஜபக்ஷ, ஜுலை நடுப்பகுதியிலேயே நாடு திரும்பவிருந்தார்.

எனினும், கட்சிக்குள்ளும், அரச கூட்டணிக்குள்ளும் முறுகல் நிலை ஏற்பட்டுள்ள நிலையில், அவர் முன்கூட்டியே நாடு திரும்புகின்றார் எனத் தெரியவருகின்றது. நாடு திரும்பிய கையோடு முக்கியமான சில சந்திப்புகளில் அவர் ஈடுபடவுள்ளார் எனவும் அறியமுடிகின்றது. குறிப்பாக நாடாளுமன்ற பின்வரிசை எம்.பி.க்கள், பசிலுடன் முக்கிய சந்திப்பொன்றை நடத்தவுள்ளதாகவும் அறியமுடிந்தது.

# கோட்டா - கூட்டமைப்பு சந்திப்பு திடீர் இரத்து!

# இறுதி நேரத்தில் அந்தர்பல்டி அடித்தது அரசு

*•நமது விசேட செய்தியாளர்*

தமிழ் தேசிய கூட்டமைப்பிற்கும், ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்சவிற்குமிடையிலான விசேட சந்திப்பு இன்று மாலை 4 மணிக்கு ஜனாதிபதி செயலகத்தில் நடைபெற ஏற்பாடாகியிருந்தபோதும் அது திடீரென இரத்துச் செய்யப்பட்டுள்ளது.

ஜனாதிபதியாக கோட்டாபய ராஜபக்ச பதவியேற்ற பின்னர், தமிழர் பிரதிநிதிகளை பிரத்தியேகமாக சந்திக்கும் முதலாவது சந்தர்ப்பமாக அது ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடும் முன்பாக கூட்டமைப்பின் பிரமுகர்கள் த.சித்தார்த்தன், எம்.ஏ.சுமந்திரன் ஆகியோரை தனித்தனியாக கோட்டாபய சந்தித்திருந்தார்.

05

# அரசியலமைப்பில் மாற்றங்களா?

## நிபந்தனைகளுக்கு இடமளியோம்!



*•யோ.தர்மராஜ்*

ஜி.எஸ்.பி. பிளஸ் வரிச்சலுகையுடன் தொடர்புடைய விடயங்கள் குறித்து நிபந்தனைகள் விதிக்கப்படுமாக இருந்தால் அதனை மறுபரிசீலனை செய்ய முடியும். மாறாக, நாட்டின் சுயாதீனத்தை கேள்விக்குறியாக்கி, அரசியலமைப்பில் மாற்றங்களை முன்னெடுக்குமாறு கோரும் நிபந்தனைகளுக்கு ஒருபோதும் இடமளிக்க முடியாது என அமைச்சரவைப் பேச்சாளரும் ஊடகத்துறை அமைச்சருமான கெஹேலிய ரம்புக்வெல்ல தெரிவித்துள்ளார்.

அரசாங்க தகவல் திணைக்களத்தில் நேற்று (15) இடம்பெற்ற அமைச்சரவை ...

02

# பெருந்தோட்ட மக்களுக்கான மானியங்களுக்கு கோரிக்கை

## அமைச்சர் கெஹேலிய தகவல்

*•யோ.தர்மராஜ்*

கொரோனா தொற்றுக்கு மத்தியில் சிரமங்களை எதிர்கொள்ளும் பெருந்தோட்ட மக்களுக்கு 5 ஆயிரம் ரூபா மற்றும் உரிய மானியங்களை வழங்குவதற்கு உரிய தரப்பிடம் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளதாக அமைச்சரவை பேச்சாளரும் ஊடகத்துறை அமைச்சருமான கெஹேலிய ரம்புக்வெல்ல தெரிவித்துள்ளார்.

அரசாங்க தகவல் திணைக்களத்தில் நேற்று (15) இடம்பெற்ற அமைச்சரவைத் தீர்மானங்களை அறிவிக்கும் வாராந்த செய்தியாளர் சந்திப்பில் கலந்துகொண்டபோது, பெருந்தோட்ட மக்களின் பிரச்சினைகள் குறித்து அரசாங்கம் கவனம் செலுத்தியுள்ளதா என ஊடகவியலாளரினால் எழுப்பப்பட்ட கேள்விக்கு பதிலளிக்கும்போதே அவர் இதனைத் தெரிவித்தார். இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்,

உண்மையில் பெருந்தோட்ட மக்களின் பிரச்சினை மிக முக்கியமானதாகும். அவர்களுக்கு வேலையில்லாத போது...

02

# வெடிபொருட்களுடன் ஒருவர் ரம்புக்கனையில் கைது





வெடிமருந்துப் பொருட்கள் மற்றும் ஆயுதங்களுடன் ரம்புக்கனையில் ஒருவரைக் கைதுசெய்துள்ளதாக விசேட அதிரடிப்படையினர் தெரிவித்துள்ளனர். இதுதொடர்பில் தீவிர விசாரணைகள் இடம்பெற்று வருகின்றன.

## எரிபொருள் விலை அதிகரிப்பால்



# அரசின்மீது மக்கள் கடும் அதிருப்தி

## அமைச்சரவையில் பொங்கினார் சமல்

*•நா.தினுஷா*

எரிபொருள் விலை அதிகரிப்பினால் நாட்டு மக்கள் அரசாங்கத்தை திட்ட ஆரம்பித்துள்ளதாக அமைச்சர் சமல் ராஜபக்ஷ நேற்று முன்தினம் நடந்த அமைச்சரவைக் கூட்டத்தில் கடும் அதிருப்தி வெளியிட்டுள்ளார்.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ சமுகமளிக்காத கார ணத்தினால் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தலைமையில் அமைச் சரவைக் கூட்டம் நடந்தது. இதன்போது கருத்துவெளியிட்ட அமைச்சர் சமல் ராஜபக்ஷ, எரிபொருட்களின் விலைகள் குறைக்கப்படவேண்டுமென வலியுறுத்தியுள்ளார். எரிபொருள் விலை சடுதியாக அந்தளவு அதிகரித்திருப்பது நல்லதல்லவென குறிப்பிட்டுள்ள அமைச்சர் சமல், உரங்களின் தட்டுப்பாடும் அரசு மீது மக்களை அதிருப்தி கொள்ள செய்துள்ளதாக தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி அமைச்சரவை கூட்டத்தில் கலந்துகொள்ளாத காரணத்தினால் இந்த விடயங்களை அவர் தலைமையிலான மற்றுமொரு கூட்டத்தில் ஆராய்வதென இதன் போது தீர்மானிக்கப்பட்டது.

# பயணக்கட்டுப்பாடு நீடிக்குமா - இல்லையா?

## 19, 20 ஆம் திகதிகளில் முடிவு - கெஹேலிய

*•யோ.தர்மராஜ்*

நாட்டில் அமுல்படுத்தப்பட்டுள்ள பயணக் கட்டுப்பாட்டை 21 ஆம் திகதிக்குப் பின்னர் நீக்குவதே எங்களுடைய எதிர்பார்ப்பு. எனினும், எதிர்வரும் நாட்களில் கிடைக்கும் சாதகமான முடிவுகளைக் கொண்டு 19 – 20 ஆம் திகதிகளிலேயே பயணக்கட்டுப்பாட்டை நீக்குவதா, இல்லையா என்பதை தீர்மானிக்க முடியும் என அமைச்சரவைப் பேச்சாளரும் ஊடகத்துறை அமைச்சருமான கெஹேலிய ரம்புக்வெல்ல தெரிவித்துள்ளார்.

அரசாங்க தகவல் திணைக்களத்தில் நேற்று (15) இடம்பெற்ற அமைச்சரவை தீர்மானங்களை அறிவிக்கும் வாராந்த செய்தியாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்,

பயணக்கட்டுப்பாடு விடயத்தில் நிலையான அறிவிப்புகள்...

02






# ஐரோப்பிய ஒன்றியத்தின் தீர்மானத்தை இலங்கை அரசு திட்டவட்டமாக நிராகரிப்பு

ஐரோப்பிய நாடாளுமன்றத்தில் தீர்மானமொன்று நிறைவேற்றப்பட்டமைக்கு இலங்கை வெளிநாட்டு அமைச்சு கவலை தெரிவித்துள்ளது.

இலங்கையில் நிலைமை, குறிப்பாக பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் கீழ் கைதுசெய்யப்பட்டவர்கள் என்ற தலைப்பிலான இந்தத் தீர்மானமானது உண்மைக்கு மாறான கருத்துக்களைக் கொண்டிருப்பதுடன், நல்லிணக்கம் மற்றும் அபிவிருத்தியில் இலங்கை மேற்கொண்டுள்ள பன்முக முன்னேற்றம் குறித்து கவனம் செலுத்தவில்லையென வெளிவிவகார அமைச்சு...

02



# நபரொருவரை தாக்கிய குற்றத்திற்கு வவுனியா நகரசபைத் தலைவர் கைது

## நேற்று மாலை பிணையில் விடுதலை

*•வவுனியா நிருபர் திவ்யா*

வவுனியா நகரசபைத் தலைவர் இராசலிங்கம் கௌதமன் நேற்று மதியம் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார். இச் சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

02




# பயணக்கட்டுப்பாட்டை நீடிக்கவேண்டிய நிலை!

## மருத்துவ சங்கத்தின் தலைவர் பத்மா தெரிவிப்பு

*•யோ.தர்மராஜ்*

மக்களின் செயற்பாடுகளில் திருப்தி அடைய முடியாதவாறு நடமாட்டங்கள் இருப்பதால் பயணக்கட்டுப்பாட்டின் காலத்தை நீடிக்க வேண்டிய தேவையுள்ளது. மாறாக, ஒரே நேரத்தில் நாடு விடுவிக்கப்படுமாக இருந்தால் கொரோனா நோயாளர்களின் எண்ணிக்கை வேகமாக அதிகரிக்கக் கூடும் என இலங்கை மருத்துவ...

02







கொழும்பு துறைமுகத்திற்கு அருகில் தீப்பற்றிய எக்ஸ்பிரஸ் பேர்ள் கப்பலினால் தொழிலை இழந்த மீனவ குடும்பங்களுக்கு 5 ஆயிரம் ரூபா கொடுப்பனவு வழங்கும் நடவடிக்கை நேற்று நீர்கொழும்பு பகுதியில் இடம்பெற்றதை படங்களில் காணலாம்.

# ஜனாதிபதி ஊடக தமிழ்ப் பிரிவு பொறுப்பதிகாரியாக சிரேஷ்ட ஊடகவியலாளர் மேனகா மூக்காண்டி நியமனம்



சிரேஷ்ட ஊடகவியலாளர் திருமதி மேனகா மூக்காண்டி, ஜனாதிபதி ஊடகப் பிரிவின் தமிழ்ப் பிரிவு பொறுப்பதிகாரியாகவும் பிரதிப் பணிப்பாளராகவும் நியமிக்கப்பட்டுள்ளார்.

நுகேகொடை தமிழ் மகா வித்தியாலயத்தின் பழைய மாணவியான திருமதி மேனகா மூக்காண்டி, இலங்கை இதழியல் கல்லூரியில் துறைசார் கல்வியைக் கற்றவராவார்.

15 வருடகால தனது ஊடக வாழ்வில் சிறந்த ஊடகவியலாளராகவும் செய்தி ஆசிரியராகவும் திறம்படக் கடமையாற்றியுள்ளார்.

ஜனாதிபதி ஊடகப் பிரிவின் பிரதிப் பணிப்பாளராக திருமதி மேனகா மூக்காண்டி நியமனம் பெறுவதற்கு முன்னர் 'தமிழ்மிரர்' பத்திரிகையின் செய்தி ஆசிரியராகக் கடமையாற்றினார்.

(ஜனாதிபதி ஊடகப் பிரிவு)

## பேக்கரி பண்டங்களின்...

பாண் தவிர்ந்த அனைத்து பேக்கரி உற்பத்திப் பொருட்களின் விலை அதிகரிக்கப்பட்டுள்ளது - என அகில இலங்கை பேக்கரி உரிமையாளர் சங்கம் தெரிவித்துள்ளது.

எரிபொருள் விலை அதிகரிப்பு காரணமாக பேக்கரி உரிமையாளர்கள் விலையை அதிகரித்துள்ளதாக சங்கத்தின் தலைவர் என்.கே.ஜெயவர்தன தெரிவித்தார்.

இதன்படி மாலு பாண், பனிஸ் மற்றும் ஏனைய பேக்கரி பண்டங்கள் 5 ரூபா முதல் 10 ரூபா வரை அதிகரிக்கப்பட்டுள்ளன.

மேலும் மாவு வகைகளின் விலை தவிர, பேக்கரி பண்டங்களுக்குப் பயன்படுத்தும் பொருட்களின் விலைகளும் உயர்த்தப்பட்டுள்ளதாக ஜெயவர்தன தெரிவித்தார்.

## அரசியலமைப்பில்...

தீர்மானங்களை அறிவிக்கும் வாராந்த செய்தியாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில், ஜிஎஸ்பி ப்ளஸ் வரிச்சலுகையானது ஆடைத் தொழில் மற்றும் ஐரோப்பிய நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படும் பொருட்களுக்கே அதிக பாதிப்பை ஏற்படுத்துகின்றது. இலங்கையானது சுயாதீன நாடு. இந்த நாடு அரசியலமைப்புக்கமையவே ஆட்சி செய்யப்படுகின்றது. அரசியலமைப்பானது மக்கள் ஆணைக்கு அடிபணிந்தே இருக்கின்றது. மக்கள் ஆணையை நிறைவேற்று அதிகாரம், நாடாளுமன்றம் மற்றும் நீதிமன்றங்களே நடைமுறைப்படுத்துகின்றன. இவற்றின்மூலம் மக்களின் உரிமைகள் பாதுகாக்கப்படுகின்றன.

நிறைவேற்று அதிகாரத்தினால் கொண்டுவரப்படும் மசோதாக்களை நாடாளுமன்றத்தில் சமர்ப்பித்ததன் பின்னர் அவற்றை நீதிமன்றத்தில் கேள்விக்குட்படுத்த முடியும். அவ்வாறு, கேள்விக்குட்படுத்தும் பட்சத்தில் நீதிமன்றத்தினால் வழங்கப்படும் தீர்ப்புகளுக்கமைய நிறைவேற்று, மற்றும் நாடாளுமன்றத்தின் தீர்மானங்களில் மாற்றங்களை ஏற்படுத்த முடியும்.

இதுவே, ஒரு ஜனநாயக நாடாகும். இவ்வாறான ஜனநாயகத்தை குழப்புவதற்கு ஏதேனும் நிபந்தனைகள் விதிக்கப்படுமாக இருந்தால் அதற்கு நாங்கள் இடமளிக்க முடியாது. இவ்வாறான நிலையில், உலக அமைப்பொன்று எங்களுக்கு ஏதேனும் சலுகைகளை வழங்குமாக இருந்தால் அது தொடர்பான பிரச்சினை குறித்த காரணத்துடன் தொடர்புடையதாக இருந்தால் அது நியாயமானதாகும். குறிப்பாக, ஜிஎஸ்பி வரிச்சலுகையின்போது சிறுவர்களை வேலைக்கு அமர்த்துதல் தொடர்பாக பேசுவதற்கு உரிமையுண்டு என்பதை ஏற்றுக்கொள்ள முடியும். அதேபோன்று, குறித்த ஆடைத் தொழிற்சாலைகளில் அடிப்படை வசதிகளில் குறைபாடுகள் இருப்பின், அடிப்படை உரிமைகள் மீறப்படுமாக இருப்பின் அது குறித்து பேசுவதற்கு ஜிஎஸ்பி வழங்கும் அமைப்புகள் பேசுவதற்கு முழு உரிமையும் உண்டு. இவ்வாறான விடயங்களை குறிப்பிட்டிருந்தால் நாங்கள் இந்த விடயங்கள் குறித்து மறுபரிசீலனை செய்யலாம்.

மாறாக, சுயாதீன நாட்டின் சுயாதீனத்திற்கு சவால்விடுத்து, அரசியலமைப்பிலுள்ள விடயங்களை மாற்றுமாறு நிபந்தனைகள் விதிக்கப்படுமாக இருந்தால் அதனை நாங்கள் ஏற்றுக்கொள்ள முடியாது. அவ்வாறு செய்யாவிடின் துப்பாக்கியை காட்டுவோம் என்பது சாதாரணமல்ல. ஆகவே, ஜிஎஸ்பி வரிச்சலுகை தொடர்பாக வெளிவிவகார அமைச்சு முக்கியத்துவம் கொடுத்து பேசும் - என்றார்.

## பயணக்கட்டுப்பாடு...

இல்லையெனக் குற்றஞ்சாட்டப்படுகின்றன. உண்மையில் உலகம் முழுவதுமே தற்போது நிலையற்ற நிலையிலேயே இருக்கின்றன. கொரோனா தொற்றை சில நாடுகள் கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவந்ததாகக் கூறப்பட்டது. ஆனால், தற்போது அந்த நாடுகளும் எதிர்பார்க்காத விதத்தில் மீண்டும் நிலைமை மோசமடைந்துள்ளது. குறிப்பாக, புதிய புதிய திரிபுகளினால் கொரோனா கட்டுப்பாட்டிற்குள் இருந்த நாடுகளும் தற்போது சவாலுக்கு முகங்கொடுத்துள்ளன.

இவ்வாறான நிலையில், நாட்டில் அமுல்படுத்தப்பட்டுள்ள பயணக்கட்டுப்பாட்டை 21ஆம் திகதிக்குப் பின்னர் நீக்குவதா, இல்லையா என்பதை அனைத்து காரணிகளையும் ஆராய்ந்து, 19 – 20ஆம் திகதிகளிலேயே தீர்மானிக்க முடியும். 21ஆம் திகதிக்குப் பின்னர் நாட்டை திறப்பதே எங்களுடைய எதிர்பார்ப்பாகும். எனினும், எதிர்வரும் நாட்களில் கிடைக்கும் சாதகமான முடிவுகளைக்கொண்டே தீர்மானிக்க முடியும்.

அவ்வாறு, எதிர்வரும் நாட்களில் சாதகமான தீர்மானம் கிடைத்தால் திறக்கப்படலாம். இல்லையென்றால் அதற்கு மாற்றீடான ஒரு செயற்பாடு குறித்து கவனம் செலுத்தப்படும். அதனைவிடுத்து, தற்போதே தீர்மானம் எடுத்துச் செயற்படும் பட்சத்தில் அப்போது நிலைமை மோசமடையுமாக இருந்தால் எடுக்கும் தீர்மானம் பிரயோசனமற்றது.

ஆகவே, எந்தத் தீர்மானத்தையும் அப்போதைய நிலைமையைக்கொண்டே எடுக்க முடியும். மாறாக, தீர்க்கதரிசி முறையில் செயற்பட முடியும் என்றால் பல உலக நாடுகளில் கொரோனா தொற்றை இல்லாதொழித்திருக்க முடியும். ஆனால், தற்போது முன்கூட்டியே எவ்வித முடிவுகளையும் எடுக்க முடியாது

– என்றார்.

## நபரொருவரை...

நகர அபிவிருத்தி அமைச்சின் கீழ் உள்ள வவுனியா வாடி வீட்டினை நடத்திவந்த மா.கதிர்காமராஜா அண்மையில் மரணமடைந்த நிலையில், அவரது குடும்பத்தினரின் பராமரிப்பின் கீழ் வாடி வீடு தற்போதுள்ளது. இந்நிலையில் மூன்று மாத குத்தகைப் பணம் தரவில்லை எனத் தெரிவித்து வாடி வீட்டு வளாகத்திற்குள் உள் நுழைய தடை விதிக்கப்பட்டுள்ளதாக நகரசபை தலைவரால் நேற்றுமுன்தினம் நோட்டீஸ் ஒட்டப்பட்டது.

இதன்போது குறித்த வாடி வீட்டில் காவல் கடமையில் நின்றவர்களுக்கும், நகரசபைத் தவிசாளருக்கும் இடையில் முரண்பாடும் ஏற்பட்டிருந்தது.

அத்துடன், அங்கிருந்த உடைமைகளுக்கும் சேதம் ஏற்பட்டதாக காவல் கடமையில் இருந்தவர்கள் தெரிவித்ததுடன், அச்சம்பவம் தொடர்பில் வாடி வீட்டு பாதுகாவலர் வவுனியா வைத்தியசாலையில் சிகிச்சைக்காகவும் அனுமதிக்கப்பட்டிருந்தார்.

இந்நிலையில், நகரசபை குறித்த வாடி வீட்டு நிர்வாகத்தில் தலையிட முடியாது எனவும் வாடி வீட்டில் நின்றவர்கள் மீது சிலர் அத்துமீறி நுழைந்து தாக்குதல் மேற்கொண்டதாகவும், உடைமைகளை சேதப்படுத்தியதாகவும் அதனை குத்தகைக்கு நடத்தி வருபவர்களால் வவுனியா பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டது.

முறைப்பாடு தொடர்பில் நேற்று சி.வி.விக்கினேஸ்வரன் எம்.பியின் கூட்டணிக் கட்சிகளில் ஒன்றாகிய ஈ.பி.ஆர்.எல்.எவ். கட்சியின் வசமுள்ள வவுனியா நகரசபைத் தலைவர் இராசலிங்கம் கௌதமன் மற்றும் வாடி வீட்டு குத்தகைக்காரர் ஆகியோரை அழைத்து விசாரணை மேற்கொண்ட வவுனியா பொலிஸார் நகரசபைத் தலைவர் கௌதமனை கைது செய்துள்ளனர்.

விசாரணைகளின் பின் நேற்று மாலை அவரை பொலிஸ் பிணையில் விடுவிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டதாக வவுனியா பொலிஸார் தெரிவித்தனர்.

## பெருந்தோட்ட...

அவர்களுக்கு பெரும் சிரமங்கள் ஏற்படுகின்றன. அதனாலேயே 5 ஆயிரம் ரூபா கொடுப்பனவு மற்றும் உரிய மானியங்களை வழங்குவதற்கு உரிய தரப்பிடம் கோரிக்கை விடுத்துள்ளோம்.

அதேபோன்று, பொருட்களை பெற்றுக்கொள்வதற்காக கூட்டுறவுச் சங்கங்களை திறந்து வைப்பதற்கும் தீர்மானிக்கப்பட்டுள்ளது. அதன்படி, ஒரு குடும்பத்தில் ஒருவர் சென்று பொருட்களை பெற்றுக்கொள்ளும் வகையில் நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டுள்ளன.

பெருந்தோட்ட மக்களுக்கு ஒன்லைன் ஊடாக பொருட்கள் பெற்றுக்கொள்வதற்கு வசதிகள் இல்லையென்பதால் பெருந்தோட்டத்துறையில் இயங்கும் சில அமைப்புகள் பொருட்களை பெற்றுக்கொடுப்பதற்கு நடவடிக்கையெடுப்பதும் சிறந்தது – என்றார்.

## பயணக்கட்டுப்பாட்டை...

சங்கத்தின் தலைவர் வைத்திய நிபுணர் பத்மா குணரத்ன தெரிவித்துள்ளார்.

கொழும்பில் இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்,

பயணக்கட்டுப்பாடு அமுல்படுத்தப்பட்டு அதனை எந்தளவு பின்பற்றுகின்றோம் என்பதை பொறுத்தே கொரோனா தொற்றை கட்டுப்படுத்தும் செயற்பாடு தங்கியுள்ளது. புத்தாண்டுக்கு முன்னர் முடக்கியது போன்றிருந்திருந்தால் இதனை விட கொரோனா நோயாளர்களின் எண்ணிக்கையை கட்டுப்படுத்தியிருக்க முடியும்.

முடக்கம் என்ற வார்த்தையை பயன்படுத்தினாலும் உண்மையில் நாடு முடங்கியுள்ளதா இல்லையா என்பதே பெரும் சந்தேகமாகவுள்ளது. அந்தளவிற்கு மக்களின் நடமாட்டங்களை காண முடிகின்றது. ஆகவே, பயணக்கட்டுப்பாட்டை நீக்குவது குறித்து ஆராயும்போது, மாவட்ட ரீதியில் கொரோனா தொற்றுப்பரவல் குறித்து ஆய்வுகளை முன்னெடுப்பதன் ஊடாக குறித்த மாவட்டத்திற்கு வெளியில் செல்லாது மக்களை மாவட்டத்திற்குள் நடமாட விடுவதற்கு முடியுமா என்பதை கண்டறிவதன் ஊடாக பயணக்கட்டுப்பாட்டை நீக்க முடியுமா என்ற முடிவை எடுக்க முடியும்.

எனினும், மக்களின் செயற்பாடுகளில் திருப்தியடைய முடியாதவாறு நடமாட்டங்கள் இருப்பதால் பயணக்கட்டுப்பாட்டின் தேவை காலத்தை நீடிக்கவேண்டிய தேவையுள்ளது. மாறாக, ஒரேநேரத்தில் நாடு விடுவிக்கப்படுமாக இருந்தால் கொரோனா நோயாளர்களின் எண்ணிக்கை வேகமாக அதிகரிக்கக்கூடும்.

நாட்டில் இன்னமும் கொரோனா தொற்று அச்சம் நீங்கவில்லை. பயணக்கட்டுப்பாடு அமுலிலுள்ள காலப்பகுதிகளில் தொற்றாளர்கள் மற்றும் மரணங்களின் எண்ணிக்கையில் ஏற்படும் வீழ்ச்சியை இனிவரும் காலங்களில் கண்டுகொள்ள முடியும்.

இதேவேளை, நாட்டில் அல்பா என்ற திரிபே அதிகமாக பரவி வருகின்றது. ஆனால், இந்தியாவில் பரவிய டெல்டா திரிபு மிகவும் ஆபத்தான ஒன்றாகும். இது பரவும் வேகம் அதிகம் என்பதால் இறப்புகளும் அதிகமாகும். ஆகவே, இதனை நாட்டுக்குள் பரவவிடாமல் தடுப்பதற்கு விமான நிலையம், துறைமுகம் போன்ற இடங்களில் மிகவும் அவதானமாக செயற்படவேண்டும்.

அவ்வாறே கடற்றொழிலில் ஈடுபடுபவர்கள், குறிப்பாக தமிழக மீனவர்களை தொடர்புகொள்ளாதிருப்பதன் மூலம் இந்த டெல்டா திரிபு நாட்டுக்குள் நுழைவதை தடுத்துக்கொள்ள முடியும். ஒருவேளை நாட்டுக்குள் நுழையுமாக இருந்தால் அது மிக ஆபத்தான நிலையை உருவாக்குவதுடன், சிலவேளை தடுப்பூசிகளுக்கும் பதிலளிக்காமலும் போகலாம் - என்றார்.

## ஐரோப்பிய ஒன்றியத்தின்...

விடுத்துள்ள அறிக்கையொன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது. அந்த அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது,

இலங்கை மக்கள் மீது மேற்கொள்ளப்பட்ட கொடூரமான பயங்கரவாதச் செயல்களுக்குத் தீர்வு காண்பதற்காக பயங்கரவாத தடுப்புச்சட்டத்தின் விதிகள் பயன்படுத்தப்பட்டுள்ளன என இலங்கை அரசாங்கம் ஆரம்பத்தில் தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றது. இந்தச் சூழலில், 2019ஆம் ஆண்டின் உயிர்த்த ஞாயிறு தின பயங்கரவாதத் தாக்குதல்களால் பல ஐரோப்பிய ஒன்றியப் பிரஜைகள் உட்பட கணிசமான உயிரிழப்புகள் ஏற்பட்டமை நினைவுகூரப்படுகின்றது.

இருதரப்பு உறவுகளின் அனைத்து அம்சங்களையும் உள்ளடக்கி, வெளிநாட்டு அமைச்சின் மூலமாக, ஐரோப்பிய ஒன்றியத்துடன் ஒரு வழக்கமான, துடிப்பான மற்றும் நல்லுறவு உரையாடலை இலங்கை அரசாங்கம் பேணி வருகின்றது என்பது குறிப்பிடத்தக்கது. பிரஸ்ஸல்ஸில் உள்ள இலங்கைத் தூதரகத்தினூடாக ஐரோப்பிய ஆணைக்குழு, ஐரோப்பிய சபை மற்றும் ஐரோப்பிய நாடாளுமன்றம் ஆகியவற்றுடன் ஆக்கபூர்வமான உரையாடலை அரசாங்கம் பேணி வருவதுடன், ஐரோப்பிய ஒன்றியத்தின் பிரதிநிதிகள் மற்றும் கொழும்பைத் தளமாகக்கொண்ட ஐரோப்பிய ஒன்றியத் தூதுவர்களுடன் அரசாங்கத்தின் சிரேஷ்ட இடைத்தரகர்களின் ஈடுபாடுகளின் காரணமாக இந்தக் கலந்துரையாடல் நீடிக்கப்பட்டுள்ளது.

இந்த நடைமுறையின் ஓர் அங்கமாக 27 முக்கிய சர்வதேச சாசனங்களுக்கிணங்க ஐரோப்பிய ஒன்றியத்தின் ஜி.எஸ்.பி. + ஐ மீளாய்வு செய்வது குறித்து, ஐரோப்பிய ஆணைக்குழுவுடன் இலங்கை தொடர்ந்தும் கலந்துரையாடி வருகின்றது. 2020-2021ஆம் ஆண்டிற்கான ஐரோப்பிய ஒன்றிய ஜி.எஸ்.பி. + கண்காணிப்பு செயன்முறையின் மூன்றாம் சுற்று மதிப்பாய்வு நடைபெற்று வருகின்றது.

பரந்தளவிலான ஒத்துழைப்பு தொடர்பான இலங்கையின் முன்னேற்றம் குறித்து வருடாந்த ஐரோப்பிய ஒன்றிய - இலங்கை கூட்டு ஆணைக்குழுவில் இலங்கை ஐரோப்பிய ஒன்றியத்திற்கு விளக்கமளித்ததுடன், இதன் 23ஆவது அமர்வு 2021 ஜனவரியில் கூட்டப்பட்டது. கூட்டு ஆணைக்குழுவின் கீழ் செயற்படும் சம்பந்தப்பட்ட செயற்குழுக்கள் மற்றும் குழுக்கள் மூலம் மேலதிக புதுப்பிப்புகள் வழங்கப்படுகின்றன.

தீர்மானத்தில் குறிப்பிடப்பட்டுள்ள முக்கிய விடயங்கள் குறித்து, திருத்தம் செய்யும் நோக்கில் பின்வரும் அவதானிப்புகளைச் சமர்ப்பிப்பதற்கு அமைச்சு விரும்புகின்றது.

அரசாங்கத்தால் முன்னெடுக்கப்பட்ட இத்தகைய நடவடிக்கைகள் சிறுபான்மையினர் உட்பட அதன் அனைத்து குடிமக்களின் உரிமைகளையும் பாதுகாப்பதற்கான அரசியலமைப்பு ஆணை மற்றும் சர்வதேச கடமைகளுக்கு அமைவாகவேயாகும். இலங்கையின் அரசியலமைப்பின் பிரிவு 12(1)இன் பிரகாரம், குறிப்பிட்ட ஏற்பாடானது, சட்டத்தின் முன் அனைத்து நபர்களும் சமமானவர்கள் என்பதையும், சட்டத்தின் சமமான பாதுகாப்பிற்கு உரித்துடையவர்கள் என்பதையும் உறுதி செய்கின்றது. மேலும், அரசியலமைப்பின் பிரிவு 12 (2) ஆனது, இனம், மதம், மொழி, சாதி, பாலினம், அரசியல் கருத்து, பிறந்த இடம் அல்லது அத்தகைய காரணங்களை அடிப்படையாகக் கொண்ட பாகுபாட்டை தடை செய்கின்றது.

ஐரோப்பிய ஒன்றியத்திற்குத் தெரிவிக்கப்பட்டுள்ளபடி, பயங்கரவாதத் தடுப்புச்சட்டத்தின் விதிகளை மறுபரிசீலனை செய்வதற்கான செயற்பாட்டில் அரசாங்கம் ஈடுபட்டுள்ளது. இந்தச் சூழலில், தற்போதுள்ள சட்டங்களை ஆய்வுசெய்வதற்கும் தேவையான திருத்தங்களை பரிந்துரைப்பதற்கும் ஓர் அமைச்சரவைத் துணைக் குழுவை நியமிப்பதற்கான செயன்முறையொன்று செயற்பாட்டில் உள்ளது என்பதை கவனத்தில் கொள்ளலாம். இந்த முயற்சியை நோக்கி, ஏனைய அதிகார வரம்புகளால் ஏற்றுக்கொள்ளப்பட்ட சர்வதேச சிறந்த நடைமுறைகள் மற்றும் உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல்கள் குறித்து விசாரணை ஆணைக்குழு அளித்த பரிந்துரைகள் குறித்து அரசாங்கம் வரையப்படும். பயங்கரவாதத் தடுப்புச்சட்டம் தன்னிச்சையாக கைதுசெய்யப்படுவதற்கும் இலங்கையில் முஸ்லிம் அல்லது ஏனைய சிறுபான்மைக் குழுக்களை தடுத்து வைப்பதற்கும் முறையாகப் பயன்படுத்தப்பட்டுள்ளது என்ற கூற்றை அரசாங்கம் நிராகரிக்கின்றது.

நாடாளுமன்ற உறுப்பினர்களில் மூன்றில் இரண்டு பெரும்பான்மையினர் ஆதரவாக வாக்களிப்பதன் மூலம் என்ற வகையில் அரசியலமைப்பில் வகுக்கப்பட்டுள்ள நடைமுறைக்கிணங்க 20ஆவது திருத்தம் இயற்றப்பட்டுள்ளது. இத்தகைய சட்டத்தைப் பொறுத்தவரை, அடிப்படை உரிமைகள் அத்தியாயம் உட்பட அரசியலமைப்பிற்கு முரணான மசோதாக்கள் நிறைவேற்றப்படுவதைத் தடுக்கும் நோக்கில் வெளிப்படைத்தன்மை மற்றும் நீதித்துறை மீளாய்வு போன்ற பல உள்ளமைக்கப்பட்ட பாதுகாப்பு நடைமுறைகள் பின்பற்றப்பட்டுள்ளன.

பொறுப்புக்கூறல் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதற்காக மற்றும் நல்லிணக்கத்தில் தொடர்ச்சியான முன்னேற்றத்தை அடைவதற்காக மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் குறித்து மனித உரிமைகள் பேரவை மற்றும் ஐரோப்பிய ஒன்றிய இடைத்தரகர்களை அரசாங்கம் தொடர்ந்தும் புதுப்பித்துள்ளது. உச்சநீதிமன்ற நீதிபதியின் தலைமையிலான ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழு, காணாமல்போனவர்களின் அலுவலகம், இழப்பீட்டு அலுவலகம், தேசிய ஒற்றுமை மற்றும் நல்லிணக்க அலுவலகம், இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு மற்றும் மீள நிகழாமையை நோக்கமாகக் கொண்டுள்ள தொடர்புடைய நிறுவனச் சீர்திருத்தங்கள் மற்றும் நிலையான அபிவிருத்தி இலக்குகளை செயற்படுத்துவதற்காக பிரதமரின் தலைமையிலான இடை அமைச்சர்கள் குழு உட்பட ஏனைய நம்பிக்கையை வளர்ப்பதற்கான நடவடிக்கைகளை நிறுவுதல் ஆகியவை இதில் அடங்கும்.

வலியுறுத்தப்படுவதற்கும் மாறாக, சுகாதார மற்றும் பாதுகாப்பு நிலைமைகள் உட்பட இலங்கையின் தொழிலாளர் உரிமைகள் சர்வதேச தொழிலாளர் அமைப்பின் தரங்களுக்கு இயைபாக உள்ளன. உற்பத்தியில் பராமரிக்கப்படும் இலங்கையின் உயர் தொழிலாளர் தரநிலைகள் ஆடைத்துறையில் பிரதிபலிக்கும் வகையில் சிறந்த தரமான தயாரிப்புகள் மற்றும் உயர் பெறுமதி உட்சேர்க்கப்பட்ட ஏற்றுமதிக்கு வழிவகுத்தன. இலங்கையிலிருந்தான நெறிமுறை தயாரிப்புகளுக்கான அதிக தேவையானது, உற்பத்தியை அதிகரிப்பதற்கும், அடுத்தடுத்த முதலீடு மற்றும் இலங்கையில் மனித மூலதனத்தை மேம்படுத்துவதற்கும் வழிவகுத்தது. ஐரோப்பிய ஒன்றிய ஜி.எஸ்.பி. + சலுகைகள் இந்த செயன்முறைக்கு குறிப்பிடத்தக்க பங்களிப்பை வழங்கியுள்ளன, இதனால் இலங்கையின் பொருளாதாரம் மற்றும் ஐரோப்பிய ஒன்றிய சந்தை ஆகியவற்றுக்கு பயன்களை அளிக்கின்றது. இதேபோல், குறிப்பிடத்தக்கதொரு வளர்ச்சித் துறையான மீன்வளத்துறை, ஐரோப்பிய ஒன்றிய ஜி.எஸ்.பி + சலுகைகளால் பயனடைந்துள்ளது.

காலனித்துவத்திற்குப் பிந்தைய உலகின் மிகப் பழைமையான ஜனநாயக நாடுகளில் ஒன்றாக இலங்கை நீண்டகாலமாக துடிப்பான ஜனநாயகத்தைக் கொண்டுள்ளது. நாட்டின் வலுவான வெளியுறவுக் கொள்கையானது நடுநிலைமை, அணிசேராமை மற்றும் நட்புறவு ஆகிய கொள்கைகளை அடிப்படையாகக் கொண்டது. அரசாங்கம் தனது ஜனநாயக நிறுவனங்களை மேலும் வலுப்படுத்துவதற்கு உறுதிபூண்டுள்ளது. ஐரோப்பிய ஒன்றிய நாடாளுமன்ற உறுப்பினர்களைக்கொண்ட 2019ஆம் ஆண்டில் இலங்கைக்கான ஐரோப்பிய ஒன்றியத் தேர்தல் பார்வையாளர் தூதரகத்தின் பேச்சாளர் வலியுறுத்தியதைபோல், தேர்தல் வெளிவந்த அமைதியான சூழல் நாட்டின் ஜனநாயக நிறுவனங்களின் ஸ்திரத்தன்மையை உறுதிப்படுத்துகின்றது. இந்தக் கருத்துகள் செல்லுபடியானதாகும்.

பாதுகாப்பு, சுகாதாரம், பொருளாதாரப் பாதுகாப்பு மற்றும் உலகெங்கிலுமுள்ள மில்லியன் கணக்கான மக்களின் வாழ்க்கைக்கான உரிமை ஆகியவற்றின் மீது கடுமையான தடைகளை ஏற்படுத்தி, கொவிட்-19 தொற்றுநோய் உலகளவில் பேரழிவு தரக்கூடிய தாக்கத்தை தொடர்ந்து கொண்டிருக்கின்றது. தொற்றுநோய்க்கு எதிராக தனது ஒட்டுமொத்த மக்களையும் பாதுகாப்பதற்காகவும், தடுப்பூசிகளுக்கு சமமான அணுகலை வழங்குவதற்காகவும் அரசாங்கத்தின் தொடர்ச்சியான மற்றும் ஒருங்கிணைந்த முயற்சிகள் இருந்தபோதிலும் இலங்கை தொடர்ந்தும் சவால்களை எதிர்கொள்கின்றது. இந்தப் பின்னணியில், சிவில் மற்றும் அரசியல் உரிமைகளுடன் உள்ளார்ந்த முறையில் இணைக்கப்பட்டுள்ள அனைத்து மக்களினதும் பொருளாதார, சமூக மற்றும் கலாசார உரிமைகளை நிலைநிறுத்துவதற்கான உலகளாவிய பன்முக நிறுவனங்கள் மற்றும் ஐ.நா. முகவர் நிறுவனங்களின் உறுதிப்பாட்டை அரசாங்கம் பாராட்டுகின்றது. இந்த முயற்சிகளின் முன்னுரிமைகள் இலக்குவைக்கப்பட்ட மக்களைத் தூண்டுவதோடு சுகாதார வசதிகளையும் பொருளாதார மறுமலர்ச்சியையும் அளித்து வருகின்றபோதிலும் இந்த முயற்சிகளில் முன்னேற்றம் கண்டு வருகின்றன.

இந்த சிக்கலான காலங்களில், நாட்டில் நிரூபிக்கப்பட்ட முன்னேற்றத்தை அறிந்துகொள்ளும் அதேநேரத்தில், தனது மக்களின் உரிமைகளைப் பாதுகாப்பதற்கான ஆதரவுகளைப் பெற்றுக்கொள்வதற்கு இலங்கை தகுதியானது. ஐரோப்பிய ஒன்றியத்துடனான தனது கூட்டுறவை பரந்தளவிலான விடயங்களில் தொடர்வதற்கு வெளிநாட்டு அமைச்சு எதிர் பார்ப்பதுடன், பரஸ்பரம் ஆர்வமுள்ள பகுதிகளில் செயலூக்கமாகவும் உற்பத்தி ரீதியாகவும் ஈடுபடுவதற்கான ஐரோப்பிய ஒன்றியத்தின் தொடர்ச்சியான உறுதிப்பாட்டை உறுதிப்படுத்துகின்றது.

2021 ஜூன் 14ஆம் திகதி, திங்கட்கிழமை வெளிநாட்டு அமைச்சில் இடம்பெற்ற சந் திப்பில், கொழும்பிலுள்ள ஐரோப்பிய ஒன்றியத்தின் பிரதிநிதிகளின் தூதரகப் பொறுப் பாளர் தோர்ஸ்டன் பார்க்ஃப்ரெட் மற்றும் கொழும்பைத் தளமாகக்கொண்ட பிரான்ஸ், இத்தாலி, ருமேனியா, ஜேர்மனி மற்றும் நெதர்லாந்து ஆகிய நாடுகளைச் சேர்ந்த ஐரோப்பிய ஒன்றியத் தூதுவர்கள் / தூதரகப் பொறுப்பாளர்களுக்கு வெளிநாட்டு அமைச்சர் தினேஷ் குணவர்தன இலங்கை அரசாங்கத்தின் மேற்படி நிலைப்பாட்டை விவரித்தார்.

மீன்வளத்துறை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, பிராந்திய ஒத்துழைப்புக்கான இராஜாங்க அமைச்சர் தாரக்க பாலசூரிய, வெளியுறவுச் செயலாளர் அட்மிரல் பேராசிரியர் ஜயநாத் கொலம்பகே ஆகியோரும் இந்தச் சந்திப்பில் கலந்துகொண்டனர்.



## புராதன இந்து இலக்கியங்கள் முன்மொழிந்துள்ள

# இராஜ்ய மண்டலக்கொள்கையில் சமகாலப் பூகோள அரசியல்

## ஓர் பார்வை

■ அ.வியாசன்
*விடுகை வருட மாணவன்*
*இந்துநாகரிகத்துறை,*
*யாழ்ப்பாணப்பல்கலைக்கழகம்.*

மனிதனால் தனித்து வாழமுடிய நிலைகாணப்படுகின்றது. அதனால் மனிதன் சமூகத்தின் பிணைப்பை நாடுகின்றன். மனிதன் தனது சுயநல நோக்குடன் மற்றொருவருள் தங்கி வாழுகின்ற நிலைக்கு சென்றான் அதாவது உணவு, உடை, பாதுகாப்பு, உறையுளுக்காக பின்னர்தான் மற்றவர்களுக்கு உதவுகின்ற மனநிலையில் காணப்பட்டன்.

அதேபோல நாடுகளும் தன் சுயநலத்துக்காக எதுவும் செய்கின்ற நிலை உருவாகின. நாடுகள் இரண்டுவகையான இறைமைகளை வெளிகாட்டுகின்றன. ஒன்று உள் இறைமை மற்றொன்று வெளி இறைமை.

**உள் இறைமை**

உள் இறைமை என்பது தன்னுடையநாட்டு மக்களை ஆளுகின்ற இறைமை அதாவது அரசின் எல்லைக்குள் அதனுடைய அதிகாரத்தை எதிர்க்கும் வல்லமை எவர்க்கும் இல்லை. வெளிநாடுகள் உள்வராமல் பாதுகாப்பதற்காக உள் இறைமை பாதுகாப்பகாக இருக்கும்.

**வெளி இறைமை**

வெளி இறைமை என்பது சர்வதேசத்துடன் தொடர்புகளை பேணுவதற்கு அரசியல் ரீதியான இறைமை. வெளித்தொடர்புகளை பேணுவதற்கு வெளி இறைமை பிரதிபலிக்கும். ஓர் அரசின் முழுமையான சுகந்திரமான செயற்பாட்டிற்கு உள்இறைமையும் வெளி இறைமையும் அவசியமாகின்றது.

அரசொன்று உருவாக அடிப்படைக்காரணியாக வெளிநாட்டு அங்கீரகமும், சர்வதேச உறவு முக்கியமான விடயமாகும். எவ்வாறு ஒரு அரசுக்கு மக்கள் தொகை, நிலப்பரப்பு, அரசாங்கம், அதிகாரம் தேவையே அதபோல வெளிநாட்டு அங்கீரகமும், சர்வதேச உறவும் தேவை.

நாடுகளுடான உறவுகள் எப்போதும் ஒரே மாதிரியாக அமையாமல் வேறபட்டதாக அமையும். நல்ல உறவாகவும் தீய உறவாகவும் அமையும் இதனை இந்து புராதன இலக்கியங்கள் மண்டலக்கொள்கை ஊடாக குறிப்பிடுகின்றன.

மண்டலக்கொள்கை என்பது புராதன இந்து அரசியற் இலக்கியங்களில் அதிகாரச் சமநிலை, இறைமை, இராச்சியங்களுக்கிடையிலான உறவுகள் ஆகியவற்றோடு தொடர்புடையதாகும். எந்த ஓர் ஆட்சியாளனுக்கும் தனது அதிகார எல்லைகளை விஸ்தீரப்படுத்தும் எண்ணம் அவசியமாக இருந்தாக வேண்டும். அதுவே ராஜதர்மமும் கூட. இத்தகைய மனோபாவமுடைய அரசன் “விஜீகீசு” என இந்து இலக்கியங்கள் குறிப்பிடப்பட்டுள்ளான்.

ஒவ்வொரு நாட்டினதும் தலைவனின் முக்கிய இலட்சியமானது ஏனைய நாடுகளைக் கைப்பற்றுவது குறித்ததாகவே இருத்தால் வேண்டும் என்கிறது காமாண்ட நீதிசாரம். அந்த வகையில் காமண்டக நீதிசாரத்தின் 8ஆம் அத்தியாயம் முழுவதும் மண்டலக்கொள்கை அதனுடன் தொடர்புடைய அதிகாரச் சமநிலை அயல்நாட்டு இராஜங்காக உறவுகள் குறித்து விரிவாக ஆராயந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

ஒரு வெற்றிபெரும் அரசனை மையமாக வைத்தே இம்மண்டலக்கொள்கை கூறப்படுகின்றது. கௌடில்யரின் கூற்றுப்படி வெற்றிக்காகக் போராடக்கூடிய ஓர் அரசனைச் சுற்றி அவனது பலவகை நண்பர்களும், எதிரிகளும், நடுநிலை அரசர்களும் இருப்பதாக இது அமைந்தது மொத்தத்தில் பன்னிரான்டு அரசர்கள் கொண்ட மண்டலமாக இது விளங்குகிறது. விஜீகீசு – வெற்றிக்கான முனையும் அரசன், அரி - இவ்வரசனின் எதிரி, மித்ரா - விஜீகீசுயின் நண்பன், அரிமித்ரா – எதிரியின் நண்பன், மித்ர மித்ரா – நண்பனின் நண்பன், அரி மித்ர மித்ரா – பகைவனின் நண்பனுக்கு நன்பன், பர்சணிகிரகா - விஜீகீசுவின் பின்புறத்திருந்து தாக்கும் எதிரி, அக்கிரண்டா - இவ்வாறன நண்பன், பர்சணிகிரகா சாரா - பின்புறத்தில் தாக்கும் எதிரியின் நண்பன், அக்கிரண்டா சாரா - பின்புறத்தில் நண்பனின் நண்பன், மத்யம் - விஜீகீசு, அரி இருவரின் எல்லையை ஒட்டி விளங்கும் பலமிக்க அரசன், உதாசீன – மண்டலத்தில் அதிக பலங்கொண்ட நடுநிலை வகிக்கும் அரசன்.

மண்டலத்தில் பன்னிரண்டு அரசுகளே இருக்கவேண்டும் என்பதோ, இருக்க முடியும் என்பதோ கருத்தன்று. வெளியுறவு பன்னிரன்டு வகையில் அமைய முடியும் என்பதையே இது சுட்டிக்காட்டுகிறதென நாம் கொள்ளவேண்டும் தவிர, சிறு நாடுகளுக்கு மட்டுமின்றிப், பெரு நாடுகளுக்கும் பொருந்தும் வகையில் மண்டலக்கொள்கையும், சத்குண்யமும் கூறப்பட்டுள்ளது. வெளியுறவுக் கொள்கைகள் ஆறகும். அவையாவன. சாந்தி – சமாதானம் அல்லது அமைதி, விக்ரகா – போர் அல்லது எதிர்ப்பு, ஆசன – போர்த்திட்டங்கள் ஏதும் செய்யாமல் இருத்தல், சம்ஹரயா – கோட்டையினுள்ளோ, வேறேரு அரசன் கீழோ பாதுகாப்புத் தேடுதல், துவைதிபாலா – ஒரு முனையில் போரும், மாற்றொரு முனையில் சமாதானமும் செய்யப்படும் இரு கொள்கைநிலை. கௌடியல்யர் மேற்கூறிய ஆறும் சூழ்நிலைக்குத் தகுந்தபடி கையாளப்பட வேண்டிய தனித்தனிக் கொள்கைகளாகும் என்று கூறினர்.

இம்மண்டலத்தில் உள்ள அங்கத்தவர்களில் விஜிகீசுவினை மையப்படுத்தி அவனுக்கு அருகிலுள்ள தேசத்தரசன அரி எனப்படுகின்றன். இவன் விசுகீவிற்கு இயற்கைப் பகைவனாகிறான். எதிரிக்கு எதிரி நண்பன் என்ற வகையில் அரிக்கு அப்புறத்தில் இருப்பவன் விஜகீசுவிற்கு நண்பனாக விளங்குவான். இவன் மித்திரா எனப்படுகிறான். இதனை இந்து இலக்கியங்கள் இராச்சியங்கள்களை மையப்படுத்தி குறிப்பிட்டலாலும்; சமகால பூகோள அரசியல் ரீதியாக ஒப்பிடகூடியாததாக உள்ளது.

அதாவது இந்தியா - சீனா இடையே லடாக் எல்லையில் நிலவிவரும் மோதலில் இந்தியாவிற்கு ஆதரவாக பெரியநாடுகள் களம் இறங்கவுள்ளன. இந்தியஎல்லையில் இருக்கும் நேபாளம், பாகிஸ்தான் போன்ற நாடுகள் இந்தியாவிற்கு எதிராக இருக்கும் நிலையில் மற்றைய வல்லரசுநாடுகள் இந்தியாவிற்கு தீவிரமாக ஆதரவு தெரிவித்துவருகின்றன.

“இந்தியாவிற்கு ஆதரவாக போர்ப் படைகளை அனுப்புவோம், சீனா எங்கெல்லாம் பிரச்சினைசெய்கிறதோ அங்கெல்லாம் படைகளை அனுப்புவோம்” என்று அமெரிக்கா வெளிப்படையாக தெரிவித்து இருந்தது.

மித்திராவின் தேசத்துக்கு அப்பாலுள்ளவன் விசுகீசுவின் இயற்கைப் பகைவனாகிய அரிக்கு இயற்கை நண்பான இருப்பானாகையால் விஜிகீசுவிற்கு அரிமித்திரா (பகைவனின் நண்பன்) ஆகிறான். அரமித்திராவிற்கு அப்பாலுள்ளவன் விஜிகீசுவிற்கு மித்ரா – மித்ரா ஆவான்.




இலங்கை பொறுத்து சீனா இந்தியாவின் போட்டி வளர்ச்சியடைந்து வருகின்ற ஒன்றாகவே விளங்குகின்றது. பிராந்திய அரசியலில் எழுந்த போட்டி சர்வதேச மட்டத்தில் தாக்கத்தை ஏற்படுத்தும் என்ற நியமத்திற்கு அமைவாக இந்தியாவின் நடவடிக்கைகள், சீனாவின் நகர்வுகளின் அடிப்படையில் நிகழ்ந்து வருகிறது. சீனாவும் பதிலுக்கு இப்போட்டியில் முனைப்பாக செயற்படுகின்றது. இந்தப் பின்புலத்தில், இந்துசமுத்திரப் பிராந்தியமே இரு தரப்புக்குமான போட்டிக்களமாக மாறியிருக்கிறது. இந்துசமுத்திரத்தின் ஆதிக்கத்தை கைப்பற்றுகின்ற நோக்கத்தில் இரு தரப்புக்குமான போட்டி இலங்கை விடயத்தில் முக்கியத்துவம் பெற்று விளங்குகிறது. குறிப்பாக இலங்கை மீது செல்வாக்கு செலுத்துகின்ற நாடுகள் என்ற வகையில் சீனா எதிர் இந்திய - அமெரிக்க கூட்டு வலுவான ஒன்றாக காணப்படுகின்றது.

இப்போட்டியில் இலங்கையின் அரசியல், பொருளாதார, இராணுவ பரப்பிலும் உள்கட்டுமாண வடிவத்திலும் பொருளாதார உதவிகளிலும் வர்த்தக நடைமுறையிலும் மேற்குறித்த இரண்டு அணிகளுக்குமிடையிலும் வலுவான போட்டி நிலவுகிறது. அத்தகைய போட்டியும் இந்தியாவை விட சீனாவும், அமெரிக்காவை விட சீனாவும் என்ற நிலை வளர்ச்சி பெற்றுள்ளது. இத்தகைய சூழலில் இந்தியாவா அல்லது சீனாவா இலங்கையில் நிலைத்திருக்கும் ஆற்றல் கொண்டது என்ற கேள்வி இயல்பானது. ஒப்பீட்டு அடிப்படையில் இந்தியாவை காட்டிலிலும் சீனாவின் ஒத்துழைப்பு நிலையான வளர்ச்சியை எட்டியுள்ளது என்ற வாதம் காணப்படுகின்றது. இதனால் இந்தியா எடுக்கும் எவ்வொரு முயற்சியும் சீனாவிற்கு நிகரானதாக காணப்படுகின்றதா என்ற கேள்வி தவிர்க்க முடியாயதது. இந்தியாவின் புவிசார் அரசியல் செல்வாக்கைக் காட்டிலும் சீனாவின் செல்வாக்கு இலங்கையில் மிகத் தீவிரமாக வளர்ந்துள்ளது. எனவே சீனா - இந்தியா எதிரி, சீனா - இந்தியா இலங்கைக்கு நண்பன் ஆகவே எதிரிக்கு எதிரி நண்பன் என்ற ரீதியில் பார்க்கமுடியும். இவ்வாறே மண்டலக்கொள்கையின் ஊடாக நோக்கமுடியும்.

விஜிகீசுவை மையப்படுத்தியப் பேசப்படும் இவ்வாறுவகை அரசுகளும் ஆட்சியைக் கைப்பற்றுவதற்கான போர்களை முன்னெடுக்கும் திசை வழிமுறைகள் குறித்துதிட்டமிட்டுள்ள விஜிகீசுவின் வழிமுறைகள் நிலைப்பாட்டிலிருந்து பெறப்பட்டவை. ஆனால், விஜிகீசு சற்றும் எதிர்பாராத நிலையில் வேறோபரு திசையில் இருந்து விஜிகீசுவை தாக்கும் எதிரியை ப்ரசணிகிரக எனக் குறிப்பிடுவர். அதாவது குதிகௌவி அல்லது பின்னிருந்து தாக்குபவன் பர்சணிகிரகளிற்கு அப்பாலிருக்கும் அவனுடைய இயற்கை பகைவனும், அதேவேளை ஆகவே விஜிகீசுவிற்கு நண்பனாகவும் உள்ள அரசனை அக்கிரண்ட என இந்து அரசிய சார்ந்த இலக்கியங்கள் குறிப்பிடுகின்றன.

இதனை அமெரிக்கா - வியட்நாம் நாடுகளின் பிரச்சினைகளை ஒப்பீடக்கூடியதாக உள்ளது. 1954ஆம் ஆண்டு. பிரெஞ்சு காலனி ஆட்சியாளர்கள், அமெரிக்க இராணுவத்தின் துணையோடு வியட்நாம் மக்கள் மீது தொடுத்த ஆக்கிரமிப்பு போரின் 8ஆவது ஆண்டு. அதிகரித்து வரும் வியட்நாம் மக்கள் படையினரின் தாக்குதல்களை சமாளிக்க, பியன்- தியன்- பு என்ற இடத்தில் தனது படைகளை குவித்து தளம் ஒன்றை உருவாக்க முயன்றன பிரெஞ்சு ஆக்கிரமிப்பு படைகள். அந்தத் தளம் தகர்க்கப்பட முடியாதது, வலுவானது என்று பிரெஞ்சு, அமெரிக்க இராணுவ நிபுணர்கள் உறுதியாக நம்பினார்கள்.

ஆனால் அந்தத் தளத்தை சுற்றியிருந்த உயரமான மலைகளில் தாக்குதல் ஆயுதங்களை எடுத்துச் சென்ற வியட்நாம் மக்கள் படைகள் பிரெஞ்சு ஆக்கிரமிப்பு படைகளை மண்டியிடச் செய்தன. 11,000 பிரெஞ்சுப் படையினர் சிறை பிடிக்கப்பட்டனர். இந்தோ சீனாவில் ஐரோப்பிய நாடுகளின் காலனிய ஆக்கிரமிப்புகளுக்கு சவக் குழி வெட்டப்பட்டது. ஆனால், அமெரிக்க ஏகாதிபத்தியம் வியட்நாமை விட்டுக் கொடுக்க தயாராகவில்லை. பிரெஞ்சு படைகள் துரத்தி அடிக்கப்பட்ட பிறகு 10 ஆண்டுகளுக்கு தெற்கு வியட்நாம் அரசுக்கு ஆயுதங்கள் அளித்தும், நேரடியாக அமெரிக்கப் படைகளை அனுப்பியும், வியட்நாம் மீது தனது ஆதிக்கத்தை நிலை நாட்ட முயற்சித்தது.

உலகின் மிகப்பெரிய முதலாளித்துவ நாடு, இராணுவ ரீதியாகவும், பொருளாதார ரீதியாகவும் யாராலும் எதிர் கொள்ள முடியாத அமெரிக்க அரசை, நெல் வயல்கள் நிறைந்த விவசாய நாடான பலவீனமான இராணுவம் கொண்ட வியட்நாம் கம்யூனிஸ்ட் கட்சி எதிர் கொண்டது.

1968ஆம் ஆண்டு சயானில் உள்ள அமெரிக்க தூதரகம் உட்பட தெற்கு வியட்நாமில் உள்ள அமெரிக்க தளங்கள் பலவற்றில் ஒரே நேரத்தில் வியட்நாம் மக்கள் இராணுவமும் தெற்கு வியட்நாமின் வியட்காங் போராளிகளும் தாக்குதல் நடத்தினர். அமெரிக்கப் படைகளின் எதிர் தாக்குதலில் ஆயிரக்கணக்கான வியட்நாமியர்கள் உயிரிழந்தனர். இந்தப் போர் முழுவதிலும் அமெரிக்க ஆயுதங்களால் கொல்லப்பட்ட வியட்நாமியர்களின் எண்ணிக்கை 25 இலட்சம், வியட்நாம் மக்கள் படையினரின் தாக்குதலில் உயிரிழந்த அமெரிக்கப் படையினரின் எண்ணிக்கை 58,000. கொல்லப்பட்ட அமெரிக்கப் படை வீரர்களின் உடல் பொதிகளையும், அமெரிக்க இராணுவம் வியட்நாம் மக்கள் மீது அவிழ்த்து விட்ட ஈவிரக்கமற்ற கொலைகளையும் தொலைக்காட்சியில் பார்த்த அமெரிக்க மக்கள் மத்தியில் அவர்களது அரசு கட்டியமைத்திருந்த பிம்பங்கள் சரிந்தன.

போரை எதிர்த்து நடந்த அமெரிக்க மக்களின் போராட்டத்துக்கு அடி பணிந்தும், போரில் தோல்வி ஏற்பட்டதாலும் அமெரிக்கா வியட்நாமிலிருந்து விலகிக் கொண்டது. வியட்நாம் ஒரே நாடாக விடுதலை பெற்றது. அமெரிக்காதான் ஒரு காலத்தில் வியட்நாமின் பிரதான எதிரி நாடாக இருந்தது. 1 நவம்பர் 1955 தொடக்கம் 30 ஏப்ரல் 1975 வரை தெற்கு வியட்நாமிற்கும், வடக்கு வியட்நாமிற்கும் இடையில் மிக கடுமையான போர் நடந்தது.

இந்தப் போரில் தீவிரமாக ஈடுபட்ட நாடுதான் அமெரிக்கா. தெற்கு வியட்நாமை அமெரிக்கா உள்ளிட்ட ஏகாதிபத்திய நாடுகள் தீவிரமாக ஆதரித்தன. அதே சமயம் வடக்கு வியட்நாமை சீனா, ரஷ்யா உள்ளிட்ட கம்யூனிஸ நாடுகள் தீவிரமாக ஆதரித்தன .இந்த யுத்தத்தில் கடைசியில் வென்றது வடக்கு வியட்நாம்.

வலிமையான விமானப்படை, தாங்கிகள், துப்பாக்கிகளை வைத்து இருந்த அமெரிக்காவை வடக்கு வியட்நாம் மிக எளிதாக வென்றது. கொரில்லா தாக்குதல் உதவியுடன் வியட்நாம் இந்த வெற்றியை அடைந்தது. அதன் பின்னர் 1995இல் இரண்டு நாடுகளும் ஒப்பந்தம் மூலம் ஒன்றாக நட்பாகிக் கொண்டன.

அமெரிக்காவில் நிறைய வியட்நாம் மாணவர்கள் படிக்கிறார்கள், பணியாற்றுகிறார்கள். இருந்தாலும் அமெரிக்காவின் நெருங்கிய நண்பன் என்ற பட்டியலில் எப்போதும் வியட்நாம் இருந்தது இல்லை. வியட்நாம் மற்ற நாடுகளுக்கு உதவினாலும் தங்கள் நாட்டில் கொரோனாவை மிக எளிதாக வென்றுள்ளது. அங்கு 266 பேருக்கு மட்டுமே கொரோனா தாக்கியது. அதில் 169 பேர் குணப்படுத்தப்பட்டுள்ளனர். 97 பேர் மட்டுமே சிகிச்சை பெற்று வருகிறார்கள். யாருமே அங்கு கொரோனா காரணமாக பலியாகவில்லை. உள்நாட்டில் கொரோனாவை வென்றதோடு, வெளிநாட்டிற்கு வியட்நாம் உதவத் தொடங்கியுள்ளது. அமெரிக்காவும் உதவியது அந்த உறவு எவ்வளவு காலம் என்பது தெரியவில்லை. சீனாவின் எதிர்ப்பின் போட்டித்தன்மை காரணமாக அமெரிக்கா இவ்வாறான உதவிகளை பெற்றுக்கொண்டுள்ளது எனலாம்.

இதேபோல வடகொரியா ஜனாதிபதி கிம் ஜோங் உன் உலகில் என்ன பிரச்சினைகள் நடைபெற்றாலும் தன் நாட்டில் மக்கள் பசி -பட்டினியால் அவதி பாட்டாலும் கவலையின்றி அணு ஆயுத சோதனையில் ஈடுபட்டு வருகிறார். வடகொரியாவின் அணு ஆயுதம் மற்றும் ஏவுகணை சோதனைகளுக்கு உலக நாடுகள் கடும் எதிர்ப்பு தெரிவித்து வருகின்றன. இருப்பினும் சர்வதேச எதிர்ப்பையும் தாண்டி பல்வேறு அணு ஆயுத சோதனைகளில் வடகொரியா ஈடுபட்டு வருகிறது. வடகொரியாவின் எதிரி நாடுகளில் ஒன்றாக பார்க்கப்படும் அமெரிக்கா பார்க்கப்பட்டு வருகிறது. இருப்பினும் கடந்த 2018 ஆம் ஆண்டு அமெரிக்க அதிபர் டிரம்ப் மற்றும் வடகொரிய ஜனாதிபதி கிம் ஜோங் உன் சந்திப்பு பெரும் எதிர்பார்ப்பை பெற்றது. இருப்பினும் அந்த சந்திப்பு மட்டுமின்றி 2019இல் நடைபெற்ற இரு நாட்டு தலைவர்கள் சந்திப்பாலும் உறவில் எவ்வித மாற்றமும் ஏற்படவில்லை.

05ஆம் பக்கம் பார்க்க...



தமிழன்
THAMILAN
தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்
இல. 91. விஜேராம மாவத்தை. கொழும்பு 07.
தொலைநகல் : 0112 67 34 42.
தொலைபேசி : 0115 200 900/ 0115 88 61 87
விளம்பரம் : 077 172 1880
மின்னஞ்சல் : thamilannews@yahoo.com/ thamilaneditor@gmail.com
2021, ஜூன் 16 ஆம் திகதி, புதன்கிழமை

# அரசின் செயற்பாடுகள்

# வார்த்தைகளில் மட்டும் வரையறுக்கப்படக் கூடாது!

இலங்கையில் முஸ்லிம்களையும், ஏனைய சிறுபான்மை இனத்தவர்களையும் கண்மூடித்தனமாக கைதுசெய்வதற்காக பயங்கரவாத தடைச்சட்டம் திட்டமிட்ட முறையில் பயன்படுத்தப்படுவதாக முன்வைக்கப்பட்டுள்ள குற்றச்சாட்டுகளை இலங்கை நிராகரித்துள்ளது.

இலங்கைக்கான ஐரோப்பிய ஒன்றிய பிரதிநிதிகள் குழுவின் பொறுப்பதிகாரி மற்றும் ஐரோப்பிய ஒன்றிய நாடுகளின் தூதுவர்களுடனான சந்திப்பின்போதே வெளிவிவகார அமைச்சர் தினேஷ் குணவர்த்தன இவ்வாறு தெரிவித்துள்ளார்.

ஐரோப்பிய நாடாளுமன்றத்தில் கடந்த 10ஆம் திகதி நிறைவேற்றப்பட்ட தீர்மானம் குறித்து கவலை வெளியிட்டுள்ளதாக வெளிவிவகார அமைச்சு தெரிவித்துள்ளது.

இலங்கை தொடர்பான தீர்மானமானது தகவல்தொடர்பில் தவறான விடயங்களை கொண்டுள்ளதுடன், அபிவிருத்தி மற்றும் நல்லிணக்கம் தொடர்பில் பன்முக முன்னேற்றத்தைக் கருத்தில் கொள்வில்லை என இலங்கை வெளிவிவகார அமைச்சு தெரிவித்துள்ளது.

பொதுமக்கள் மீது இழைக்கப்பட்ட கொடூரமான செயல்களுக்குத் தீர்வு காண்பதற்காகவே பயங்கரவாத தடைச்சட்டம் பயன்படுத்தப்படுகின்றது என வெளிவிவகார அமைச்சு தெரிவித்துள்ளது.

பயங்கரவாத தடைச்சட்டத்தின் விதிகளை மறுஆய்வு செய்யும் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளதாகவும் வெளிவிவகார அமைச்சு தெரிவித்துள்ளது.

இந்த முயற்சியை நோக்கி தேவையான திருத்தங்களை முன்மொழிய தற்போதுள்ள சட்டத்தை அரசாங்கம் ஆராய்ந்து வருகின்றது. மேலும், ஏனைய நியாயாதிக்கங்களால் பின்பற்றப்படும் சர்வதேச சட்டங்களையும் ஆராய்ந்துவருகின்றது எனவும் வெளிவிவகார அமைச்சு தெரிவித்துள்ளது.

ஆனால், வெளிவிவகார அமைச்சர் கூறுவது போன்றுதானா நாட்டின் நிலைமை இருக்கிறது? சட்டத்தரணி ஹிஜாஸ் ஹிஸ்புல்லாஹ் கைதுசெய்யப்பட்டு ஒரு வருடத்திற்கு மேலாகியிருக்கிறது. அவருக்கு எதிராக நிரூபிக்கப்பட்டுள்ள குற்றச்சாட்டுகள் எவை?

சட்டத்தரணி ஹிஜாஸ் ஹிஸ்புல்லாஹ்வுக்கு எதிராக சாட்சியம் வழங்குமாறு சி.ஐ.டி. எனும் குற்றப்புலனாய்வுத் திணைக்களம் பலரை வற்புறுத்தி வருவதாக சிரேஷ்ட சட்டத்தரணி சமிந்த அத்துகோரள புத்தளம் மேல் நீதிமன்றுக்கு கடந்த 11ஆம் திகதி அறிவித்திருந்தார்.

உயிர்த்த ஞாயிறு தின தொடர் தற்கொலைத் தாக்குதல்கள் குறித்த விசாரணைகளுக்காக கைதுசெய்யப்பட்டு சி.ஐ.டி.யில் தடுத்து வைக்கப்பட்டிருந்த பின்னர் தற்போது விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள சிரேஷ்ட சட்டத்தரணி ஹிஜாஸ் ஹிஸ்புல்லாஹ் உள்ளிட்ட இருவருக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்டுள்ள வழக்குடன் தொடர்பில்லாத, எனினும், அவ்வழக்கின் சாட்சியாளர்களாகக் கூடிய வாய்ப்புள்ள இருவரை, சி.ஐ.டி.யினர் கடந்த இரண்டு மூன்று மாதங்களாகக் கைதுசெய்து தடுத்து வைத்து ஹிஜாஸ் ஹிஸ்புல்லாஹ்வுக்கு எதிராக சாட்சியம் வழங்குமாறு வற்புறுத்தியுள்ளதாக அவர் குறிப்பிட்டாரே. அவை குறித்து அரசுக்குத் தெரியாதா?

சிரேஷ்ட சட்டத்தரணி ஹிஜாஸ் ஹிஸ்புல்லாஹ் உள்ளிட்ட இருவருக்கும் எதிராக சதி செய்தமை, சமூகங்களிடையே வெறுப்புணர்வை தூண்டியமை போன்ற குற்றச்சாட்டுக்களின் கீழ் புத்தளம் மேல் நீதிமன்றில் தாக்கல் செய்யப்பட்டுள்ள குற்றப் பகிர்வுப்பத்திரம் மீதான வழக்கானது முதல் தடவையாக விசாரணைக்கு வந்தபோதே இந்த விடயங்கள் அம்பலமாகின. இது தொடர்பில் அமைச்சர் தினேஷின் நிலைப்பாடு என்ன?

சட்டத்தரணி ஹிஜாஸ் ஹிஸ்புல்லாஹ்வின் சட்டத்தரணிகள் தாக்கல் செய்த நகர்த்தல் பத்திரத்துக்கமையவே குறித்த வழக்கு விசாரணைக்கு வந்தது.

அவர்களுக்கு எதிராக 1979ஆம் ஆண்டின் 48ஆம் இலக்க பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழும், 2007ஆம் ஆண்டின் 57ஆம் இலக்க சிவில், அரசியல் உரிமைகளுக்கான சர்வதேச இணக்கப்பாட்டு சட்டத்தின் கீழும் 5 குற்றச்சாட்டுக்களை உள்ளடக்கி, இந்த குற்றப்பகிர்வுப் பத்திரத்தை சட்ட மா அதிபர் தாக்கல் செய்துள்ளதாகவும், குற்றச்சாட்டுக்களை உறுதி செய்ய 75 சாட்சியாளர்களின் பட்டியலையும், 17 ஆவணங்களையும் சட்ட மா அதிபர் இணைத்துள்ளார்.

கடந்த ஒரு வருடத்துக்கு மேலாக சட்டத்தரணி ஹிஜாஸ் ஹிஸ்புல்லாஹ், குற்றப் புலனாய்வு மற்றும் சிறைச்சாலை அதிகாரிகளின் பொறுப்பில் தடுத்து வைக்கப்பட்டுள்ள நிலையில், அவரை உடனடியாக நீதிமன்றில் ஆஜர் செய்து, அவருக்கு எதிரான குற்றப் பத்திரிகையைக் கையளித்து வழக்கை விசாரிக்க நகர்த்தல் பத்திரத்தினூடாக, ஹிஜாஸின் சட்டத்தரணிகள் கோரியிருந்தனர்.

விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள சிரேஷ்ட சட்டத்தரணி ஹிஜாஸ் ஹிஸ்புல்லாஹ் உள்ளிட்ட இருவர் தொடர்பிலான வழக்கை பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் தாக்கல் செய்யப்பட்டுள்ள வழக்குகள் எனும் ரீதியில் முன்னுரிமையளித்து உடனடியாக விசாரணைக்கு எடுக்க வேண்டும் என சட்டத்தரணிகள் கோரினர். அதன்படி அவரை நீதிமன்றுக்கு அழைத்து குற்றப் பத்திரிகையைக் கையளிக்க நடவடிக்கையெடுக்க வேண்டும் எனவும் அவர்கள் சுட்டிக்காட்டினர்.

நிலைமைகள் இப்படியிருக்கையில், வெளிவிவகார அமைச்சர் ஒப்புக்கு சப்பாணி கட்டி உலகிற்கு ஒரு நியாயத்தைக் கூற முற்படுகிறார். இலங்கையானது அண்மைக்காலமாக சீனாவுடன் நெருக்கத்தைக் காட்டி மேற்குலகின் அதிருப்தியை சம்பாதித்து வருகிறது. மறுபுறம், தன்னை ஜனநாயக நாடென்று காட்டிக்கொள்ளும் தேவையும் இலங்கைக்கு இருக்கிறது. உலகின் அபிப்பிராயத்தைப் பெறவே இப்படியான கருத்தை கூறும் அமைச்சர் தினேஷ் குணவர்தனவின் அரசு, இன்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பையும் சந்தித்து உலகிற்கு தன்னை ஜனநாயகவாதியாகக் காட்ட முற்படுகிறது. எல்லாம் நல்லதுதான். ஆனால், அரசின் நடவடிக்கை செயலில் இருக்க வேண்டும். வார்த்தைகளில் அல்ல.



# அமைச்சரவை தீர்மானங்கள்!

## 2021.06.14 அன்று இடம்பெற்ற அமைச்சரவை கூட்டத்தில் எட்டப்பட்ட முடிவுகள்

### 01.பாரியளவிலான அபிவிருத்தி கருத்திட்டங்களின் 2021 முதலாம் காலாண்டு இறுதியிலான முன்னேற்றம்

மதிப்பீட்டு செலவு ஒரு பில்லியனை விட அதிகரிக்கின்ற 284 பாரியளவிலான அபிவிருத்திக் கருத்திட்டங்கள் 41 அமைச்சுக்களின் கீழ் தற்போது நடைமுறைப்படுத்தப்பட்டு வருவதுடன், குறித்த கருத்திட்டங்களுக்காக 2021ஆம் ஆண்டில் 692.5 பில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது. அவற்றில் 53 கருத்திட்டங்கள் அனைவருக்கும் குடிநீர் மற்றும் 100,000 கிலோமீற்றர்வீதி அபிவிருத்தி போன்றன அரசாங்கத்தின் முன்னுரிமை அபிவிருத்தி இலக்குகளுக்கான கருத்திட்டங்களாகும். குறித்த கருத்திட்டங்களின் நிலையான முதலீட்டு இலக்குகளைப் பூர்த்தி செய்வதற்காக அனைத்து நிறுவனங்களும் ஒன்றிணைந்து செயற்பட வேண்டிய தேவை மற்றும் ஒருசில கருத்திட்டங்களின் செயற்பாடுகளுடன் நேரடியாகத் தொடர்புபடும் காணிகளைக் கையகப்படுத்தும் நடைமுறைகள் மற்றும் சட்டரீதியான பிரச்சினைகளைத் துரிதமாக நிவர்த்தி செய்ய வேண்டிய தேவையைச் சுட்டிக்காட்டி 2021 ஆம் ஆண்டின் முதலாம் காலாண்டில் குறித்த கருத்திட்டங்களின் முன்னேற்றங்கள் தொடர்பாக நிதி அமைச்சர் சமர்ப்பித்த அறிக்கை அமைச்சரவையின் கவனத்தில் கொள்ளப்பட்டது.

### 02. இலங்கையில் 2021 டிசம்பர் 13 தொடக்கம் 18 ஆம் திகதி வரை நடத்துவதற்குத் திட்டமிடப்பட்டுள்ள கட்புலனாகா கலாசார மரபுரிமைகளைப் (ICH) பாதுகாத்தல் தொடர்பான யுனெஸ்கோ அங்கத்துவ நாடுகள் குழுவின் 16ஆவது கூட்டத்தொடருக்கு வசதியளித்தல்

இலங்கை கட்புலனாகா கலாசார மரபுரிமைகளைப் பாதுகாத்தல் தொடர்பான யுனெஸ்கோ பேரவையின் அங்கத்துவ நாடாக இருப்பதுடன், சமகாலத்தில் குறித்த நாடுகளுக்கிடையேயான அங்கத்துவ நாடுகளின் குழு அங்கத்தவராகவும் செயற்பட்டு வருகின்றது. குறித்த குழுவின் 16ஆவது கூட்டத்தொடரை டிசம்பர் மாதம் 13ஆம் திகதி தொடக்கம் 18ஆம் திகதி வரை கொழும்பில் நடத்துவதற்கான வசதியளித்தல் செயற்பாடுகளுக்கான பொறுப்பு இலங்கைக்கு கிடைத்துள்ளது.

குறித்த கூட்டத்தொடரில் யுனெஸ்கோ பணிப்பாளர் நாயகம் உள்ளிட்ட செயலகத்தின் 30 பேர் அடங்கிய தூதுக்குழு மற்றும் 195 அங்கத்துவ நாடுகளின் பிரதிநிதிகள் மற்றும் தூதுக்குழு அடங்கலாக 1000 வெளிநாட்டுப் பிரதிநிதிகளின் வருகை எதிர்பார்க்கப்படுகின்றது. அதற்கமைய, கூட்டத்தொடருக்கான வசதியளித்தல்களுக்காக தயாரிக்கப்பட்டுள்ள செயற்பாட்டுத் திட்டத்தின் பிரகாரம் மேற்கொள்வதற்காக கல்வி அமைச்சர் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

### 03. மாகாண சபைகளின் நிர்வாகத்தின் கீழுள்ள தெரிவுசெய்யப்பட்ட மாவட்ட பொது மருத்துவமனைகளை சுகாதார அமைச்சின் நிர்வாகத்தின் கீழ் மேம்படுத்தல்

இலங்கையில் தேசிய மருத்துவமனைகளில் காணப்படும் மருத்துவ சிகிச்சைகள், அறுவை சிகிச்சை மற்றும் ஆய்வுகூட வசதிகளுக்கு சமமான வசதிகளை வழங்கி அனைத்து மாவட்டங்களிலும் தெரிவுசெய்யப்பட்ட மருத்துவமனை ஒன்றை மேம்படுத்துவதற்கு அரசாங்கம் திட்டமிட்டுள்ளது. அதற்கமைய, தற்போது மாகாண சபைகளால் நிர்வகிக்கப்படுவதும் மூன்றாம்நிலை சுகாதார சேவைகள் நிறுவன வகைப்படுத்தலின் கீழ் காணப்படும் மாத்தளை, நாவலப்பிட்டி, எம்பிலிப்பிட்டி, அவிசாவளை , கம்பஹா, மன்னார், வவுனியா, கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவு மாவட்ட பொது மருத்துவமனைகளின் சேவை வழங்கலின் தரம், சமத்துவம் மற்றும் வினைத்திறன் போன்றவற்றை அதிகரிப்பதற்காகவும், இலகுவாக நிர்வாக நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காகவும் அவற்றை சுகாதார அமைச்சின் கீழ் கொண்டு வருவது பொருத்தமென இனங்காணப்பட்டுள்ளது. அதற்கமைய, அந்நோக்கத்தை அடைவதற்காக குறித்த மாவட்ட பொது மருத்துவமனைகளை சுகாதார அமைச்சின் நிர்வாகத்தின் கீழ் கொண்டு வருவதற்காக சுகாதார அமைச்சர் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

### 04. இலங்கை மற்றும் பங்களாதேஷுக்கு இடையேயான முன்னுரிமை வர்த்தக உடன்படிக்கையை (PTA) எட்டுவதற்கான கலந்துரையாடலை ஆரம்பித்தல்

இலங்கை மற்றும் பங்களாதேஷ் ஆகிய இரு நாடுகளும் சார்க் முன்னுரிமை வர்த்தக உடன்படிக்கை (SAPTA), தெற்காசிய சுதந்திர வர்த்தக உடன்படிக்கை (SAFTA), உலகளாவிய முன்னுரிமை வர்த்தக முறையை (GSTP), ஆசிய பசுபிக் வலய வர்த்தக உடன்படிக்கை (APTA) மற்றும் முன்மொழியப்பட்டுள்ள பல்துறை தொழில்நுட்ப மற்றும் பொருளாதார ஒத்துழைப்புக்கள் தொடர்பான வங்காள விரிகுடா நாடுகளுக்கான கூட்டுறவு (BIMSTEC) போன்ற உடன்படிக்கைகளின் பங்குதார நாடுகளாகச் செயற்படுகின்றன. ஆனாலும், குறித்த உடன்படிக்கைகளின் கீழ் விசேட ஏற்பாடுகள் காணப்பட்டாலும், இரு நாடுகளுக்கிடையிலான வர்த்தகங்கள் குறைந்தளவிலேயே இடம்பெறுகின்றன. பிரதமர் கடந்த மார்ச் மாதம் பங்களாதேஷுக்கான உத்தியோகபூர்வ விஜயத்தை மேற்கொண்டபோது இருநாடுகளுக்கிடையேயான பொருளாதார தொடர்புகளை வலுப்படுத்துவதற்கான சுதந்திர வர்த்தக உடன்படிக்கையை துரிதமாக மேற்கொள்ள




வேண்டிய தேவை இருநாட்டுத் தலைவர்களாலும் ஏற்றுக்கொள்ளப்பட்டது. அதற்கமைய, பங்களாதேஷுடன் முன்னுரிமை வர்த்தக உடன்படிக்கையை எட்டுவதற்கு அந்நாட்டின் குறித்த அதிகாரிகளுடன் கலந்துரையாடலை நடத்துவதற்காக வர்த்தக அமைச்சர் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

### 05. குடியியல் வழக்குக் கோவையை திருத்தம் செய்தல்

சத்தியப்பிரமாணம் அளிக்கப்பட்ட மொழி பெயர்ப்பாளர்களை நியமித்தல் மற்றும் கண்காணித்தலை முறைமைப்படுத்துவதற்காகவும், அதுதொடர்பாக தற்போது காணப்படும் ஏற்பாடுகளின் தெளிவின்மையை நீக்குவதற்காகவும் பொருத்தமான வகையில் குடியியல் வழக்கு கோவையின் XVI ஆம் அத்தியாயத்தில் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாட்டைத் திருத்தம் செய்ய வேண்டிய தேவை கண்டறியப்பட்டுள்ளது. அதற்கமைய, குடியியல் வழக்கு கோவையின் XVIஆம் அத்தியாயத்தின் 118, 119 மற்றும் 120 போன்ற உறுப்புரைகளைத் திருத்தம் செய்வதற்கும், அதற்காக சட்டமூலமொன்றைத் தயாரிக்குமாறு சட்டவரைஞருக்கு ஆலோசனை வழங்குவதற்கும் நீதி அமைச்சர் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

### 06. ஆரம்பநிலை நீதிமன்றத்தை நிறுவுதல்

நீதித்துறையின் தாமதங்கள் எமது நாட்டில் முக்கிய தீர்மானம்மிக்க கட்டத்தை அண்மித்துள்ளதால், அதற்குத் தாக்கம் செலுத்தும் பிரச்சினைகளைக் கவனத்தில் கொள்வதற்காகவும், நீதியைப் பெற்றுக் கொடுக்கும் செயன்முறையை மீண்டும் உயிர்ப்பூட்டுவதற்கும், வலுவூட்டுவதற்கும் திட்டமிடலுடன் கூடிய, இலக்குகளுக்கமைவான அணுகுமுறையொன்றுக்கான தேவை கண்டறியப்பட்டுள்ளது. அதற்கமைய, முன் வழக்கு விசாரணை மற்றும் ஆரம்பநிலை நீதிமன்றங்களை ஸ்தாபித்தல் தொடர்பான ஆய்வுக்கற்கையை மேற்கொள்வதற்காக மேன்முறையீட்டு நீதிமன்ற நீதிபதி ருவன் பர்னாந்து தலைமையில் நீதி அமைச்சர் குழுவொன்றை நியமித்துள்ளார். குறித்த குழு சமர்ப்பித்துள்ள பரிந்துரைகளைக் கருத்தில் கொண்டு, கீழ்வரும் நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக நீதி அமைச்சர் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

ஆரம்பநிலை நீதிமன்றங்களை ஸ்தாபிப்பதற்குத் தேவையான சட்ட ஏற்பாடுகளை வகுக்கும் வகையில் 1978ஆம் ஆண்டு 02ஆம் இலக்க நீதித்துறை சட்டத்தை திருத்தம் செய்தல் மற்றும் ஆரம்பநிலை நீதிமன்றங்கள் தொடர்பான விசேட நடைமுறைகளுக்கான ஏற்பாடுகளை வகுப்பதற்காக புதிய சட்டத்தை அறிமுகப்படுத்தும் வகையில் சட்டமூலத்தை தயாரித்தல் என்பன இதிலடங்கும்.

### 07. மன்னார் காற்றாலை மின்னுற்பத்தி நிலையத்தை நிர்மாணித்தல்

திருகோணமலை, மன்னார், மாதம்பே, போலவத்த மற்றும் கப்பல்துறை போன்ற இடங்களில் அமைந்துள்ள 05 உப மின்கட்டமைப்பு நிலையங்களுக்கு 60 மெகாவாட் காற்றாலை மின்சாரத்தை இணைப்பதற்காக 2019 ஜனவரி மாதம் 29ஆம் திகதி இடம்பெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் அங்கீகாரம் கிடைத்துள்ளது. அதற்கமைய, குறித்த கருத்திட்டத்தின் கீழ் மன்னார் காற்றாலை மின்னுற்பத்தி நிலையத்தை அமைப்பதற்காகவும் மின்வலுக் கட்டமைப்புடன் இணைத்துக் கொள்வதற்காக சர்வதேச போட்டி விலைமனு கோரப்பட்டுள்ளது. அமைச்சரவையால் நியமிக்கப்பட்டுள்ள பேச்சுவார்த்தைக் குழுவின் பரிந்துரைக்கமைய இருபது வருட நடவடிக்கைக் காலத்தின் அடிப்படையில் நிர்மாணித்தல், பராமரித்து ஒப்படைத்தல் மற்றும் செயற்படுத்தல் அடிப்படையில் காற்றாலை மின்னுற்பத்தி நிலையத்தை அமைத்தல் மற்றும் மன்னார் உப மிகவலுக்கட்டமைப்புடன் இணைத்தல் போன்றவற்றுக்கான ஒப்பந்தம் HIRURAS POWER PVT LTD இற்கு வழங்குவதற்காக மின்சக்தி அமைச்சர் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

### 08. அரச நிறுவனங்களுக்குத் தேவையான துணித் தேவைகளை மாகாண மட்டத்தில் உள்ளூர் உற்பத்தியாளர்களிடம் கொள்வனவு செய்தல்

ஏற்றுக்கொள்ளப்பட்ட தரத்தில் அமையாத தரம் குறைந்த இறக்குமதிகளால் உள்ளூர் சந்தையின் ஆக்கிரமிப்பு மற்றும் 70% வீதமான மூலப்பொருட்களை இறக்குமதி செய்தல் போன்ற காரணங்களால் உற்பத்தி செலவு அதிகரித்துள்ளமை போன்ற தற்போது துணி மற்றும் உள்ளூர் ஆடைக் கைத்தொழில் துறையில் ஈடுபட்டுள்ள உள்ளூர் உற்பத்தியாளர்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகளாகக் கண்டறியப்பட்டுள்ளது. அதனால் குறித்த பிரச்சினைக்கு முகங்கொடுப்பதற்காக உள்ளூர் துணி உற்பத்தியாளர்களுக்கு இயலுமான வகையில் ஒவ்வொரு மாகாணத்திலும் அரச நிறுவனங்களுக்குத் தேவையான பத்திக், கைத்தறி மற்றும் உள்ளூர் துணிகளை அந்தந்த மாகாணங்களிலுள்ள உள்ளூர் உற்பத்தியாளர்களிடமிருந்து கொள்வனவு செய்வதற்கும், குறித்த துணித்தேவைகளை அந்தந்த மாகாணங்களில் கொள்வனவைப் பூர்த்திசெய்து கொள்ள முடியாவிடின், வேறு மாகாணங்களிலுள்ள உற்பத்தியாளர்களிடமிருந்து கொள்வனவு செய்வதற்கு இயலுமான வகையில் ஏற்பாடுகளை மேற்கொள்வதற்காக பத்திக், கைத்தறித் துணிகள் மற்றும் உள்ளூர் ஆடைக் கைத்தொழில் உற்பத்திகள் இராஜாங்க அமைச்சரின் பரிந்துரையின் பிரகாரம் வர்த்தக அமைச்சர் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

### 09. 2021 ஜூன் மாதம் 01ஆம் திகதி தொடக்கம் 2022 ஜனவரி மாதம் 31ஆம் திகதி வரையான 08 மாத காலத்திற்கான டீசல் இறக்குமதிக்கான ஒப்பந்தம் வழங்கல்

2021 ஜூன் மாதம் 01 ஆம் திகதி தொடக்கம் 2022 ஜனவரி மாதம் 31 ஆம் திகதி வரையான 08 மாத காலத்திற்கான டீசல் (உயர்ந்தபட்ச சல்பர் சதவீதம் 0.05) 1,137,500 பரல்கள் மற்றும் டீசல் (உயர்ந்தபட்ச சல்பர் சதவீதம் 0.001) 262,500 பரல்களை இறக்குமதி செய்வதற்கான நீண்டகால ஒப்பந்தத்திற்காக இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தில் பதிவுசெய்யப்பட்டுள்ள விநியோகஸ்தர்களிடமிருந்து போட்டி விலைமனுக் கோரப்பட்டுள்ளது. அதற்கமைய, அமைச்சரவையால் நியமிக்கப்பட்டுள்ள விசேட நிரந்தரப் பெறுகைக் குழுவின் பரிந்துரைக்கமைய குறித்த ஒப்பந்தம் சிங்கப்பூர் M/s Petrochina International Singapore (Pvt) Ltd இற்கு வழங்குவதற்காக எரிசக்தி அமைச்சர் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

### 10. மர்பன் மசகு எண்ணெய் இறக்குமதிக்கான நீண்டகால ஒப்பந்தம் வழங்கல்

2021 ஜூன் மாதம் 01 ஆம் திகதி தொடக்கம் 2022 பெப்ரவரி மாதம் 28 ஆம் திகதி வரையான 09 மாத காலத்திற்கான மர்பன் மசகு எண்ணெய் இறக்குமதி செய்வதற்கான நீண்டகால ஒப்பந்தத்திற்காக இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தில் பதிவுசெய்யப்பட்டுள்ள விநியோகஸ்தர்களிடமிருந்து போட்டி விலைமனு கோரப்பட்டுள்ளது. அதற்கமைய, அமைச்சரவையால் நியமிக்கப்பட்டுள்ள விசேட நிரந்தரப் பெறுகைக் குழுவின் பரிந்துரைக்கமைய குறித்த ஒப்பந்தம் சிங்கப்பூர் M/s Conscio Ltd, Nigeria விற்கு வழங்குவதற்காக எரிசக்தி அமைச்சர் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

### 11. மஹரகம அபேக்ஷா மருத்துவமனைக்கான MRI (1.5T) ஸ்கானர் இயந்திரம் விநியோகம்

மஹரகம அபேக்ஶா மருத்துவமனைக்கான MRI (1.5T) ஸ்கானர் இயந்திரம் விநியோகித்தல், நிறுவுதல், இயக்குதல் மற்றும் பராமரித்தலுக்கான விலைமனுக் கோரலுக்காக உள்ளூர் போட்டி விலைமனு கோரப்பட்டுள்ளது. அதற்கமைய, அமைச்சரவையால் நியமிக்கப்பட்டுள்ள விசேட நிரந்தரப் பெறுகைக் குழுவின் பரிந்துரை மற்றும் அது தொடர்பான பெறுகை ஆட்சேபனைச் சபையின் பரிந்துரைக்கமைய MRI (1.5T) ஸ்கானர் இயந்திரமொன்றை விநியோகிப்பதற்கான பெறுகை M/s Techno medics International (Pvt) Ltd இற்கு வழங்குவதற்காக சுகாதார அமைச்சர் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

### 12. நிதி அமைச்சின் ஆண்டறிக்கை – 2020 (இறுதி வரவு-செலவு தொடர்பான அறிக்கை) – (விடய இலக்கம் 30)

2003ஆம் ஆண்டு 03ஆம் இலக்க அரச நிதி முகாமைத்துவ (பொறுப்பு) சட்டத்தின் 13ஆவது உறுப்புரையில் குறிப்பிட்டவாறு ஆண்டறிக்கையினை (இறுதி வரவு-செலவு தொடர்பான அறிக்கை) நிதி அமைச்சர் நாடாளுமன்றத்திற்கு பொதுமக்களுக்கு நிதியாண்டு முடிவடைந்த பின்னர் 05 மாதங்களுக்கு முன்னர் சமர்ப்பித்தல் வேண்டும். அதற்கமைய தயாரிக்கப்பட்ட 2020 ஆம் ஆண்டின் ஆண்டறிக்கை 2021 ஆம் ஆண்டு மே மாதம் 31ஆம் திகதி வெளியிடப்பட்டுள்ளது.

கொவிட்-19 தொற்றால் ஏற்பட்டுள்ள பொருளாதார மாறிகளின் தாக்கங்களைக் குறைப்பதற்கு மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் உள்ளடங்கலாக அரச நிதிப்போக்கு, 2020 ஆம் ஆண்டின் பொருளாதார வளர்ச்சி, உலகப் பொருளாதார வளர்ச்சி, உண்மை நிலைமை, உள்ளூர் கேள்வி மற்றும் வழங்கல், முதலீடுகளும் சேமிப்புக்களும், வெளிநாட்டு நிதிப்பிரிவின் வளர்ச்சி, பணவீக்கம் போன்ற பிரிவுகளை உள்ளடக்கியதாக முழுமையான பொருளாதார மற்றும் சமூகப் பொருளாதாரக் குறிகாட்டிகள் தொடர்பான விபரங்கள் இவ்வறிக்கையில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன. அதேபோல், அரச வருமானம் மற்றும் செலவு, காசுப் பாய்ச்சல் முகாமைத்துவம், வரவு-செலவு குறைநிரப்பு மற்றும் கடன் கட்டமைப்பு உள்ளடங்கலான இறுதி வரவு -செலவு நிலைமைகள் தொடர்பான விபரங்கள் மேற்படி அறிக்கையில் உள்ளடக்கப்பட்டுள்ளன. குறித்த அறிக்கையை பாராளுமன்றத்தில் சமரப்பிப்பதற்காக நிதி அமைச்சராக பிரதமர் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

***(அரசாங்க தகவல் திணைக்களத்தின் பிரசாரப் பிரிவினால் சிங்கள மொழியிலான அமைச்சரவைத் தீர்மான ஆவணம் தமிழ் மொழியில் மொழி பெயர்க்கப்பட்டுள்ளது.)***

# நாயாறு - நந்திக்கடல் - காக்கைதீவு ஆகியவற்றை புனரமைக்க தீர்மானம்

## - நடவடிக்கைகளை விரைவுபடுத்துமாறு அமைச்சர் டக்ளஸ் ஆலோசனை

நந்திக்கடல், நாயாறு களப்புக்களின் புனரமைப்பு பணிகளை நடைமுறைப்படுத்துமாறு தெரிவித்த அமைச்சர் டக்ளஸ் வோனந்தா, யாழ். காக்கைதீவு கடல் நீரேரியை தூர்வாருவதற்கான நடவடிக்கைகளையும் மேற்கொள்ளுமாறு தெரிவித்தார்.

நடளாவிய ரீதியில் காணப்படுகின்ற களப்புக்களை புனரமைக்கும் வேலைத் திட்டம் தொடர்பாக இடம்பெற்ற மீளாய்வுக் கலந்துரையாடலின் போதே, கடற்றொழில் அமைச்சரினால் மேற்குறித்த ஆலோசனைகள் முன்வைக்கப்பட்டுள்ளன.

நாட்டின் பல்வேறு பகுதிகளிலும் காணப்படுகின்ற சுமார் ஒன்பது பிரதான களப்புக்களை அபிவிருத்தி செய்வதற்கான ஒழுங்கு நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவினால் நக்டா, நாரா மற்றும் கடற்றொழில் திணைக்களம் ஆகியவற்றிற்கு ஆலோசனை வழங்கப்பட்டிருந்தது.

இந்நிலையில், அவற்றின் தற்போதைய நிலை தொடர்பாக ஆராயும் நோக்கில் இன்றைய கூட்டம் நடைபெற்றிருந்தது.

இதன்போது, முல்லைத்தீவு, நந்திக்கடலை அபிவிருத்தி செய்வதற்கான திட்டங்கள் ஏற்கனவே வகுக்கப்பட்டு விட்டதாக தெரிவித்த அதிகாரிகள், நந்திக்கடல் அபிவிருத்தி திட்டம் வன வளங்கள் பாதுகாப்பு அமைச்சின் அனுமதிக்காக அனுப்பப்பட்டுள்ளதாக தெரிவித்தனர்.



அதேபோன்று, நாயாறு களப்பு அபிவிருத்திக்கான விலைமனுக் கோரல் நடைமுறைகள் வகுக்கப்பட்டுள்ளதாக அதிகாரிகள் தெரிவித்த நிலையில், விலைமனுக் கோரல் தொடர்பான விளம்பரங்களை அமைச்சின் இணையத்தளத்தில் தகுதியானவர்களை தெரிவு செய்து வேலைகளை ஆரம்பிக்குமாறு தெரிவித்தார்.

ரெக்கவ களப்பு அபிவிருத்தி திட்டம் மதிப்பீட்டுக்காக பிரதேச சபைக்கு அனுப்பப்பட்டுள்ளதாகவும், அருகம்பே களப்பு தொடர்பான அபிவிருத்தி திட்டங்கள் கரையோர பாதுகாப்பு திணைக்களத்திற்கு அனுப்பப்பட்டுள்ளதாக தெரிவித்ததாகவும் கடற்றொழில் அமைச்சருக்கு தெரிவித்த அதிகாரிகள், அனுமதி கிடைத்தவுடன் அபிவிருத்தி திட்டங்களை ஆரம்பிக்க முடியுமெனவும் சுட்டிக்காட்டினர்.

இந்நிலையில், அம்பாறை மாவட்டத்திற்குரிய பாணம மற்றும் பாணகல களப்புக்களின் அபிவிருத்திக்கான திட்டங்கள் வகுக்கப்பட வேண்டும் எனவும் புத்தளம், சிலாபம், முந்தல் ஆகிய களப்புக்களும் அபிவிருத்தி செய்யப்பட வேண்டுமெனவும் அமைச்சர் அதிகாரிகளிடம் எடுத்துரைத்தார்.

மேலும், யாழ்ப்பாணத்தின் பல்வேறு பகுதிகளிலும் கடலட்டை பண்ணைகளை அமைக்கும் திட்டம் மேற்கொள்ளப்பட்டு வருவதை சுட்டிக்காட்டிய அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, பூநகரி களப்புக்களில் இறால் வளர்ப்பு தொடங்குவதற்கான உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறும் நக்டா நிறுவனத்தின் அதிகாரிகளுக்கு அறிவுறுத்தினார்.

அத்துடன், யாழ். காக்கைதீவு களப்பு தூர் வாரப்பட வேண்டுமென தெரிவித்த கடற்றொழில் அமைச்சர் அதற்கான நிதியை திரட்டுவதற்குரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு அமைச்சின் செயலாளருக்கு ஆலோசனை வழங்கியிருந்தார்.

மேலும், நாடெங்கிலுமுள்ள பிரதான 09 களப்புக்களின் அபிவிருத்திக்கான திட்டங்களையும் இவ்வருட இறுதிக்குள் வகுத்து அப்பணிகளை தொடங்குவதற்கான ஏற்பாடுகளை மேற்கொள்ளுமாறு அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அதிகாரிகளுக்கு ஆலோசனை வழங்கினார்.

இக்கலந்துரையாடலில் கடற்றொழில் அமைச்சின் செயலாளர் திருமதி இந்து ரத்நாயக்க, நக்டா நிறுவனத்தின் தலைவர் நிமல் சந்திரரத்ன, நாரா நிறுவனத்தின் தலைவர் பேராசிரியர் நவரத்னராஜா உள்ளிட்ட அமைச்சின் அதிகாரிகள் கலந்து கொண்டனர்.

# சிலாபத்தில் பொலிஸார் தீவிர பரிசோதனை



(ஜூட் சமந்த)

சிலாபம் நகரத்துக்குள் பிரவேசிக்கும் சகலரையும் கடுமையான பரிசோதனைக் குட்படுத்த சிலாபம் பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர்.

நேற்று காலை சிலாபம் - புத்தளம் வீதியில் தெதுஓயா வீதித்தடையில் இந்த பரிசோதனை நடவடிக்கைகள் இடம்பெற்றிருந்தன.

சிலாபம் நகரத்துக்குத் தேவையற்ற வகையில் மக்கள் உள்நுழைவதைக் கட்டுப்படுத்துவதற்காகவே இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

அவ்வாறு தேவையின்றி நகருக்குள் பிரவேசிப்பவர்களுக்கு எதிராக தனிமைப்படுத்தல் சட்டத்துக்கமைய நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் பொலிஸார் தெரிவித்தனர்.

# கல்முனையில் சில பகுதிகளுக்கு 30 ஆம் திகதி வரை மின்வெட்டு

(கே.எ.ஹமிட்)

கல்முனை மின் பொறியியலாளர் பிரிவில் அவசர திருத்த வேலை காரணமாக மின் துண்டிப்பு இடம்பெறவுள்ளதாக, இலங்கை மின்சார சபையின் கல்முனை பிராந்திய மின் பொறியியலாளர் அறிவித்துள்ளார்.

நிந்தவூர் மின் பாவனையாளர் சேவை நிலையத்திற்குட்பட்ட நிந்தவூர் 02ஆம் குறுக்கு தெரு பகுதியில் இன்று (16) காலை 08.30 மணி முதல் மாலை 05.00 மணி வரையும், நிந்தவூர் முஸ்தபாபுரம் பகுதியில் நாளை வியாழக்கிழமை (17) காலை 08.30 மணி முதல் மாலை 05.00 மணி வரையும், கல்முனை, சாய்ந்தமருது, நிந்தவூர் ஆகிய மின் பாவனையாளர் சேவை நிலையத்திற்குட்பட்ட தரவைக்கோவில், அம்மன்கோவில், பீச் வீதி, இஸ்லாமாபாத் வீட்டுத்திட்டம், உடையார் வீதி, கடற்கரைப்பள்ளி, வீவீ வீதி, வொலிவேரியன், கல்முனைக்குடி, ஒலுவில் கிராமம், நிந்தவூர், அட்டாளைச்சேனை, பாலமுனை, காரைதீவு ஆகிய பகுதிகளில் எதிர்வரும் சனிக்கிழமை (19) காலை 08.30 மணி முதல் மாலை 05.00 மணி வரையும், மின் தடைப்படும்.

மேலும் நிந்தவூர், வெளவாலோடை, திராய்க்கேணி ஆகிய பகுதிகளில் எதிர்வரும் செவ்வாய்க்கிழமை (22) காலை 08.30 மணி முதல் மாலை 05.00 மணி வரையும், கல்முனை மின் பாவனையாளர் சேவை நிலையத்திற்குட்பட்ட வைத்தியசாலை வீதி, மணல்சேனை, பாண்டிருப்பு, மருதமுனை, துறைவந்தியமடு, பெரிய நீலாவணை ஆகிய பகுதிகளில் எதிர்வரும் புதன்கிழமை (23) காலை 08.30 மணி முதல் மாலை 05.00 மணி வரையும், மின் தடைப்படும்.

நாவிதன்வெளி, அண்ணாமலை ஆகிய பகுதிகளில் எதிர்வரும் வியாழக்கிழமை (24) காலை 08.30 மணி முதல் மாலை 05.00 மணி வரையும், நிந்தவூர் 02ம் குறுக்குத்தெரு, அட்டாளைச்சேனை கோணவத்தை, ஜீ.ரீ.சி. தெற்கு, திராய்க்கேணி, சின்னப்பாலமுனை, சம்மாந்துறை அம்பாறை வீதி, ஹிலால்புரம், வங்கலாவடி, ஹிஜ்ராபுரம் ஆகிய பகுதிகளில் சனிக்கிழமை (26) காலை 08.30 மணி முதல் மாலை 05.00 மணி வரையும் நிந்தவூர், வெளவாலோடை, திராய்க்கேணி ஆகிய பகுதிகளில் செவ்வாய்க்கிழமை (29) காலை 08.30 மணி முதல் மாலை 05.00 மணி வரையும், ஒலுவல் கிராம பகுதியில் புதன்கிழமை (30) காலை 08.30 மணி முதல் மாலை 05.00 மணி வரையும் மின் தடைப்படுமெனவும் அறிவிக்கப்பட்டுள்ளது

# கருக்குப்பனை கிராமத்தில் மேலும் 10 பேருக்கு கொரோனா தொற்று





(ஜூட் சமந்த)

ஆராச்சிக்கட்டுவ, கருக்குப்பனை கிராமத்தில் கொரோனா தொற்றுக்குள்ளான மேலும் 10 பேர் அடையாளம் காணப்பட்டதையடுத்து மொத்த நோயாளர்களின் எண்ணிக்கை 35ஆக அதிகரித்துள்ளதுடன், அந்த பிரதேசத்துக்குள் உள்நுழைவதற்கு அங்கிருந்து வெளியேறுவதற்கு தடைவிதிக்கச் சுகாதார மற்றும் பாதுகாப்பு பிரிவினரால் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

ஆராச்சிக்கட்டுவ சுகாதார வைத்திய அதிகாரிகள் காரியாலயம் மற்றும் ஆராச்சிக்கட்டுவ பொலிஸாரினால் இந்த நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளது.

கடந்த 12ஆம் திகதி ஆராச்சிக்கட்டுவ சுகாதார வைத்திய அதிகாரிகள் காரியாலத்தின் அதிகாரிகளினால் கருக்குப்பனை கிராமத்தைச் சேர்ந்த 200 பேருக்கு பி.சி.ஆர். பரிசோதனை மேற்கொள்ளப்பட்டிருந்தது.

அதற்கமைய, நேற்று முன்தினம் கிடைக்கப்பெற்ற அந்த பரிசோதனையின் அறிக்கைக்கமைய கருக்குப்பனை கிராமத்தைச் சேர்ந்த 35 பேருக்கு கொரோனா தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

இவ்வாறு தொற்றுக்குள்ளானவர்களாக அடையாளம் காணப்பட்ட 35 பேரும் சிகிச்சைக்காகச் சிகிச்சை மத்திய நிலையங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதுடன், அவர்களுடன் தொடர்புடையவர்கள் தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர். இதேவேளை அந்தக் கிராமத்துக்கு உள் நுழையவும், வெளியேறவும் சுகாதார மற்றும் பாதுகாப்பு பிரிவினரால் தற்காலிக தடை விதிக்கப்பட்டுள்ளது.

# கல்முனைப் பிராந்தியத்தில் நாளுக்கு நாள் நோயாளர்களின் எண்ணிக்கை அதிகரிப்பு

(பாறுக் ஷிஹான்)

கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பிரிவுக்குட்பட்ட பகுதிகளில் நேற்று (15) வரை 194 கொரோனா தொற்றுக்குள்ளானோர் அடையாளம் காணப்பட்டு, சிகிச்சை பெற்று வருவதாக சுகாதார சேவைகள் பணிப்பாளர் டொக்டர் குணசிங்கம் சுகுணன் தெரிவித்தார். கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பிரிவுக்குட்பட்ட பகுதிகளில் கொவிட் - 19 கொரோனா தொற்றுக்குள்ளானோரின் விபரங்களை ஊடகங்களுக்கு தெரிவிக்கும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் தொடர்ந்தும் கூறுகையில்,

கல்முனைப் பிராந்தியத்தில் தற்போது நாளுக்கு நாள் தொற்றாளர்களின் எண்ணிக்கை அதிகரித்துக் கொண்டு வருகின்றன.

கடந்த 24 மணித்தியாலத்திற்குள் 14 தொழிலாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

மேலும் உயிரிழப்புக்கள் இடம்பெறுவதை தவிர்க்க வேண்டுமாக இருந்தால் பயணத்தடை அமுல் படுத்தப்பட்டுள்ள காலப்பகுதியில் பொதுமக்கள் பொறுப்புடன், சுகாதார தரப்பினரின் அறிவுறுத்தல்களை முழுமையாக கடைப்பிடிப்பது அவசியமாகும்.

இதுவரை கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பிரிவில் கொரோனா தொற்றின் காரணமாக 29 பேர் உயிரிழந்துள்ளனர். மேலும் முதலாவது அலையில் இரண்டு தொற்றாளர்கள் மாத்திரம் அடையாளம் காணப்பட்டிருந்த நிலையில் இரண்டாம் அலையில் 1468 தொற்றாளர்களும், மூன்றாவது அலையில் 577 தொற்றாளர்களும் அடையாளம் காணப்பட்டுள்ளனர். இதுவரை 17621 நபர்களுக்கு பி.சி.ஆர். பரிசோதனைகளும் 23778 நபர்களுக்கு அன்ரிஜன் பரிசோதனைகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார்.

# தன்னார்வ கடற்படையின் புதிய தளபதியாக ரியர் அட்மிரல் உபுல் டி சில்வா பதவியேற்பு

இலங்கை தன்னார்வ கடற்படையின் புதிய தளபதியாக ரியர் அட்மிரல் உபுல் டி சில்வா நேற்று முன்தினம் இலங்கை தன்னார்வ கடற்படை தலைமையகத்தில் கடமைகளை ஏற்றுக்கொண்ட பின் கடற்படைத் தலைமைகத்தில் கடற்படைத் தளபதி வைஸ் அட்மிரல் நிஷாந்த உலுகேதென்னவை சந்தித்தார்.

அங்கு கடற்படை மரபுகளுக்கமைய ரியர் அட்மிரல் உபுல் டி சில்வா தன்னார்வ கடற்படை தலைமையகத்திக்கு வரவேற்கப்பட்டதுடன் ,தன்னார்வ கடற்படையின் முன்னாள் தளபதியான ரியர் அட்மிரல் சனத் உத்பல தன்னார்வ கடற்படை தலைமையகத்தில் வைத்து கடற்படை பாரம்பரியமாக ரியர் அட்மிரல் உபுல் டி சில்வாவுக்கு கடமைகளை ஒப்படைத்தார்.



இதைத் தொடர்ந்து இலங்கை தன்னார்வ கடற்படையின் புதிய தளபதி மற்றும் கடற்படைத் தளபதி இடையிலான சந்திப்பு நடைபெற்றது.

மேலும், இலங்கை தன்னார்வ கடற்படையின் புதிய தளபதி பதவிக்கு கூடுதலாக, ரியர் அட்மிரல் உபுல் டி சில்வா மேற்கு கடற்படைத் தளபதியாகவும் தொடர்ந்து பணியாற்றுவார்.

# 7 வயது சிறுமியை பாலியல் துஷ்பிரயோகம் செய்ய முயற்சி

## இரு சிறுவர்கள் கைது

(கனகராசா சரவணன்)

மட்டக்களப்பு வாழைச்சேனை பிரதேசத்தில் 7 வயது சிறுமியை பாலியல் துஷ்பிரயோகம் செய்ய முயற்சித்த சிறுவர்கள் இருவர் நேற்று முன்தினம் கைதுசெய்யப்பட்டுள்ளதாக வாழைச்சேனை பொலிஸார் தெரிவித்தனர்.

12 மற்றும் 14 வயதுடைய இருவரே இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளனர். வாழைச்சேனை பொலிஸ் பிரிவிலுள்ள கிராமம் ஒன்றில் சம்பவ தினமான நேற்று முன்தினம் மாலை வீட்டில் சிறுமியின் தாயார் அருகிலுள்ள வீடு ஒன்றுக்கு சென்ற நிலையில், குறித்த சிறுமி வீட்டில் தனிமையில் இருந்தபோது அந்த பகுதியைச் சேர்ந்த இரு சிறுவர்கள் வீட்டினுள் புகுந்து சிறுமியை பாலியல் பலாத்காரம் செய்ய முயற்சித்துவிட்டு தப்பி ஓடியுள்ளனர். இதனையடுத்து சிறுமி பெற்றோரிடம் தனக்கு நேர்ந்த கதியை தெரிவித்ததையடுத்து அவர்கள் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளனர். அதனையடுத்து, குறித்த இரு சிறுவர்களையும் பொலிஸார் கைதுசெய்ததுடன் பாதிக்கப்பட்ட சிறுமியை வைத்தியசாலையில் அனுமதித்துள்ளனர். இதில் கைதுசெய்யப்பட்ட இருவரையும் நீதிமன்றில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இது தொடர்பான மேலதிக விசாரணைகளை வாழைச்சேனை பொலிஸார் மேற்கொண்டுவருகின்றனர்.





**அனுராதபுரம், மிஹிந்தலை பகுதியிலுள்ள ஆடைத் தொழிற்சாலையில் பணிபுரியும் ஊழியர்களில் 800க்கும் அதிகமானனோருக்கு கொரோனா தடுப்பூசியேற்றும் பணிகள் சுகாதார தரப்பினரால் நேற்று முன்தினம் முன்னெடுக்கப்பட்டன. இந்த நடவடிக்கைகளைக் கண்காணிக்க அனுராதபுரம் மாவட்ட அரசாங்க அதிபர் ஆர்.எம்.வன்னிநாயக்க விஜயம செய்திருந்தார். (படங்கள் - அனுராதபுரம்)**

## கோட்டா - கூட்டமைப்பு ...

எனினும், ஜனாதிபதி தேர்தலில் வெற்றியடைந்த பின்னர், கூட்டமைப்பை இதுவரை சந்தித்து பேசியதில்லை.

புதிய அரசியலமைப்பு உருவாக்கத்திற்கான நிபுணர்குழுவில் தமிழ் தேசிய கூட்டமைப்பு தனது பரிந்துரைகளை வழங்கியிருந்தது. ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவிற்கும் அனுப்பியிருந்தது. அத்துடன், அரசியல் தீர்வு விடயம் தொடர்பில், ஜனாதிபதியுடன் பேச்சு நடத்த வேண்டுமென இரா.சம்பந்தன் முன்னதாக பகிரங்கமாக கோரியுமிருந்தார்.

இந்த பின்னணியில் தமிழ் தேசிய கூட்டமைப்பின் தலைவர்களுடனான சந்திப்பிற்கு, ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ அழைப்பு விடுத்திருந்தார். இந்த சந்திப்பில் இரா.சம்பந்தன், மாவை சேனாதிராசா, த.சித்தார்த்தன், செல்வம் அடைக்கலநாதன், எம்.ஏ.சுமந்திரன் ஆகியோர் கலந்து கொள்வார்களென ஜனாதிபதி செயலகத்திற்கு அறிவிக்கப்பட்டிருந்தது. இந்த சந்திப்பு குறித்து கருத்து வெளியிட்ட சுமந்திரன் எம்.பி. ,இன்றைய சந்திப்பில் புதிய அரசியலமைப்பு குறித்து மட்டும் கூட்டமைப்பு பேச்சு நடத்துமென தெரிவித்திருந்தார். ஆனால், நேற்று மாலை கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தனை தொடர்புகொண்ட ஜனாதிபதி செயலக அதிகாரியொருவர், இந்த சந்திப்பு இரத்துச் செய்யப்பட்டதாகவும் பிறிதொரு தினத்தில் சந்திப்பை நடத்துவது பற்றி அறிவிக்கப்படுமெனவும் தெரிவித்துள்ளார்.

எவ்வாறாயினும் கூட்டமைப்பை சந்திப்பது தொடர்பில் அரச உயர்மட்டத்திற்கு வந்த அழுத்தங்களே இந்த சந்திப்பு இரத்துச் செய்யப்பட்டமைக்கான காரணமென தெரியவந்தது.

# மாதம்பே பிரதேசத்தில் 29 பேருக்கு கொரோனா



மாதம்பே, பழைய நகரப் பிரதேசத்தில் 29 பேருக்கு கொரோனா தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

அதனையடுத்து மாதம்பே, பழைய நகரப் பிரதேசத்தில் 109 பேருக்கு பி.சி.ஆர். பரிசோதனை மேற்கொள்ள மாதம்பே சுகாதார வைத்திய அதிகாரிகள் நேற்று முன்தினம் நடவடிக்கை எடுத்திருந்தனர்.

இவ்வாறு தொற்று உறுதிப்படுத்தப்பட்டவர்கள் சிகிச்சை நிலையங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதுடன், தொடர்புடையவர்களை தனிமைப்படுத்தலுக்குட்படுத்தவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

# ஹெரோயினுடன் ஒருவர் கைது

(ஜூட் சமந்த)

**சிலாபம் பிரதேசத்தில் 5170 மில்லிகிராம் ஹெரோயின் போதைப்பொருளுடன் சந்தேக நபரொருவர் சிலாபம் போதைப்பொருள் ஒழிப்புப் பிரிவு அதிகாரிகளினால் கைதுசெய்யப் பட்டுள்ளார்.**

**நேற்று முன்தினம் நாத்தாண்டி, ஜனஹிதகம பிரதேசத்தில் வைத்தே இவர் கைதுசெய்யப் பட்டுள்ளார்.**

**நாத்தாண்டி, ஜனஹிதகம பிரதேசத்தைச் சேர்ந்த 35 வயதுடைய நபரொருவரே இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளார். கைப்பற்றப்பட்ட போதைப்பொருளுடன் சநதேகநபர் மேலதிக விசாரணைகளுக்காக மாரவில பொலிஸாரிடம் ஒப்படைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.**

# கிழக்கு மாகாணத்தில் கடந்த 24 மணிநேரத்தில் 150 பேருக்கு கொரோனா தொற்று – 4 பேர் உயிரிழப்பு

(அப்துல்சலாம் யாசீம்)

கிழக்கு மாகாணத்தில் கடந்த 24 மணிநேரத்துக்குள் கொரோனா தொற்றுடன் 150 பேர் இனங்காணப்பட்டுள்ள நிலையில், நான்கு மரணங்கள் பதிவாகியுள்ளதாக கிழக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் ஏ.ஆர்.எம்.தௌபீக் தெரிவித்தார்.

திருகோணமலையிலுள்ள கிழக்கு மாகாண சுகாதார சேவைகள் பணியகத்தில் நேற்று ஊடகவியலாளர்களுக்கு கருத்து தெரிவிக்கும்போதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.



கிழக்கு மாகாணத்தில் 24 மணி நேரத்திற்குள் கொரோனா தொற்றுடன் 150 பேர் இனங்காணப்பட்டுள்ளதுடன், நான்கு மரணங்களும் இடம்பெற்றுள்ளன.

இந்நிலையில், இதனை கடந்த சில தினங்களோடு ஒப்பிடும்போது சற்றுக் குறைவான எண்ணிக்கையாக காணப்படுகின்றது எனவும் அவர் குறிப்பிட்டார்.

இதேவேளை, 24 மணிநேரத்திற்குள் நான்கு மரணங்களும் கடந்த 7 நாட்களில் 39 மரணங்களும் ஏற்பட்டுள்ளன. மூன்றாவது அலையில் மொத்தமாக கிழக்கு மாகாணத்தில் 200 மரணங்கள் பதிவுசெய்யப்பட்டுள்ளதாகவும் கிழக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் மேலும் தெரிவித்தார்.

# மட்டக்களப்பு கடலில் அனுமதியின்றி மீன்பிடிக்கச்சென்ற 8 மீனவர்கள் கைது

## முன்று இயந்திரப்படகுகள் மீட்பு



(கனகராசா சரவணன்)

மட்டக்களப்பிலிருந்து அனுமதியின்றி ஆழ்கடலில் இயந்திரப்படகுகளில் மீன்பிடிக்கச் சென்ற 8 பேரை நேற்று முன்தினம் இரவு கடற்படையினர் கடலில் வைத்து கைதுசெய்துள்ளதுடன், மீட்கப்பட்ட 3 இயந்திரப்படகுகளையும் கரைக்கு கொண்டுவந்து சேர்த்துள்ளதாக கடற்படையினர் தெரிவித்தனர்.

கடற்படையினர் வழமைபோல கடலில் நேற்று முன்தினம் இரவு ரோந்து நடவடிக்கையில் ஈடுபட்டுக்கொண்டிருந்தபோது சந்தேகத்துக்கிடமாக கடலில் இயந்திரப்படகுகள் பயணித்ததை அவதானித்த கடற்படையினர், பின்தொடர்ந்து இயந்திரப் படகுகளை வழிமறித்து சோதனையிட்டனர்.

இதன்போது அனுமதிப்பத்திரமின்றி சட்டவிரோதமாக ஆழ்கடலில் மீன்பிடிக்கச் சென்ற மட்டக்களப்பு மாமாங்கப் பகுதியைச் சேர்ந்த 8 மீனவர்கள் என கண்டுபிடிக்கப்பட்டதையடுத்து அவர்களை கைதுசெய்ததுடன், அவர்களின் 3 இயந்திரப் படகுகளையும் கல்லடி கடற்படை முகாமிற்கு கொண்டுவந்தனர்.

இதில் கைதுசெய்யப்பட்டவர்களுக்கு எதிராக சட்டநடவடிக்கை எடுப்பதற்காக மீன்பிடித் திணைக்களத்திடம் ஒப்படைக்கப்படவுள்ளதாக கடற்படையினர் தெரிவித்தனர்.

# துவிச்சக்கரவண்டியில் வந்த திருடன் மோட்டார் சைக்கிளில் பறந்த சம்பவம்

## வாழைச்சேனையில் கைவரிசை

(எச்.எம்.எம்.பர்ஸான்)

துவிச்சக்கரவண்டி ஒன்றில் வந்த நபரொருவர் துவிச்சக்கர வண்டியை வைத்துவிட்டு மோட்டார் சைக்கிளை திருடிச் சென்றுள்ள சம்பவமொன்று நேற்று முன்தினம் இடம்பெற்றுள்ளது.



வாழைச்சேனை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட அல்லாப்பிச்சை வீதியில் வைத்தே இத் திருட்டுச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

வாழைச்சேனையைச் சேர்ந்த நபரொருவரின் EP – BCV 8533 எனும் இலக்கமுடைய கறுப்புநிற பல்சர் மோட்டார் சைக்கிள் ஒன்றே திருடப்பட்டுள்ளது.

திருடன் வந்த துவிச்சக்கரவண்டி கைப்பற்றப்பட்டுள்ளதுடன், திருட்டுச் சம்பவத்தை கண்டுபிடிக்க வாழைச்சேனை பொலிஸார் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# மட்டக்களப்பு – முறக்கொட்டாஞ்சேனை பகுதியில் கசிப்பு உற்பத்திசெய்த இரு நிலையங்கள் முற்றுகை

## மூன்று இலட்சம் லீற்றர் கசிப்பு - கோடா மீட்பு

(ஏறாவூர் நிருபர் நாஸர்)

மட்டக்களப்பு - முறக்கொட்டாஞ்சேனை வாவியின் தீவுப்பகுதியில் கசிப்பு உற்பத்திசெய்த இரண்டு நிலையங்களை ஏறாவூர் பொலிஸார் நேற்று முற்றுகையிட்டுள்ளனர்.

அங்கிருந்த இரண்டு பேர் கைது செய்யப்பட்டுள்ளதுடன், சுமார் மூன்று இலட்சம் லீற்றர் கசிப்பு மற்றும் கோடாவும்







கைப்பற்றப்பட்டுள்ளதாக ஏறாவூர் பொலிஸ் ஊழல் தடுப்புப் பிரிவு பொறுப்பதிகாரி உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் எச்.எம்.ஷியாம் தெரிவித்தார்.

கைதுசெய்யப்பட்டவர்கள் பொலிஸ் பிணையில் விடுதலை செய்யப்பட்டுள்ளதுடன், அவர்களுக்கெதிராக வழக்கு தொடரப்பட்டுள்ளதாக பொலிஸார் கூறினர்.

பொதுமக்களிடமிருந்து கிடைத்த இரகசியத் தகவலையடுத்து ஏறாவூர் பொலிஸ் ஊழல் தடுப்புப் பிரிவு பொறுப்பதிகாரி உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் எச்.எம்.ஷியாம் தலைமையிலான பொலிஸ் குழுவினர் தோணிகளில் அங்கு சென்றுகசிப்பு உற்பத்தி நிலையங்களை முற்றுகையிட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

கைதுசெய்யப்பட்ட ஒருவரிடம் 2 இலட்சத்து 20 ஆயிரம் லீற்றர் கசிப்பு இருந்துள்ளது. மற்றையவரிடம் ஒரு இலட்சத்து 86 ஆயிரம் லீற்றர் கசிப்பு இருந்ததாக பொலிஸார் தெரிவித்தனர். 15 கொள்கலன்களில் சேமிக்கப்பட்டிருந்த இக்கசிப்பு வாவியில் ஊற்றப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

ஏறாவூர் பொலிஸ் நிலையத்தின் அண்மைக்கால வரலாற்றில் மிகக்கூடுதலான கசிப்பு இம்முறையே கைப்பற்றப்பட்டுள்ளதாக தெரியவருகிறது.

கொரோனா அச்சம் காரணமாக மதுபானசாலைகள் காலவரையின்றி மூடப்பட்டுள்ளதனால் கசிப்பு உற்பத்தி மற்றும் விற்பனை கிராமப்புறங்களில் அதிகரித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.





# மட்டக்களப்பு கரடியனாறில் சட்டவிரோத மண் கடத்தலில் ஈடுபட்ட நால்வர் கைது





(ரீ.எல்.ஜவ்பர்கான்)

மட்டக்களப்பு கரடியனாறு பொலிஸ் பிரிவிற்குட்பட்ட முந்தானையாறு வடிச்சல் பகுதியில் சட்டவிரோதமான முறையில் மண் அகழ்வில் ஈடுபட்ட நால்வர் கைதுசெய்யப்பட்டதுடன், கடத்தலுக்குப் பயன்படுத்திய நான்கு உழவு இயந்திரங்கள் மற்றும் மண் என்பனவும் கைப்பற்றப்பட்டுள்ளதாக மட்டக்களப்பு மாவட்ட குற்ற விசாரணைப் பிரிவு பொறுப்பதிகாரி பி.எஸ்.பி.பண்டார தெரிவித்தார்.

மட்டக்களப்பு மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் சுதத் மாசிங்கவின் பணிப்புரையின்கீழ் மாவட்ட குற்ற விசாரணைப் பிரிவு பொறுப்பதிகாரி பி.எஸ்.பி.பண்டார தலைமையிலான பொலிஸ் குழுவினர் கரடியனாறு பொலிஸ் பிரிவிற்குட்பட்ட முந்தானை ஆற்றில் சட்டவிரோதமான முறையில் அகழப்பட்ட மண்ணை அனுமதிப்பத்திரமின்றி கடத்திச் சென்ற நால்வரை நேற்று அதிகாலை 5 மணியளவில் கைதுசெய்துள்ளனர்.

கைதுசெய்யப்பட்ட சந்தேகநபர்கள் மற்றும் உழவு இயந்திரம், மணல் என்பன கரடியனாறு பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டதுடன், நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்படவுள்ளதாக மாவட்ட குற்ற விசாரணைப் பிரிவு பொறுப்பதிகாரி பி.எஸ்.பி.பண்டார மேலும் தெரிவித்தார்.

# 200 படுக்கைகளுடன் கொரோனா சிகிச்சை நிலையம் திறந்துவைப்பு

(சாவகச்சேரி நிருபர்)





தென்மராட்சி-நாவற்குழி பகுதியிலுள்ள அரச உணவுக் களஞ்சியத்தில் இலங்கை இராணுவத்தினரால் உருவாக்கப்பட்ட கொரோனா சிகிச்சை நிலையம் நேற்று செவ்வாய்க்கிழமை காலை யாழ். மாவட்ட கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் பிரியந்த பெரேராவினால் திறந்துவைக்கப்பட்டது.



இருநூறு படுக்கை வசதிகளுடன் கூடிய கொரோனா சிகிச்சை நிலைய திறப்புவிழா நிகழ்வில் யாழ். மாவட்ட அரசாங்க அதிபர், வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர், யாழ். போதனா வைத்தியசாலையின் பிரதிப் பணிப்பாளர், யாழ். மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் மற்றும் இராணுவ உயர் அதிகாரிகள் கலந்து கொண்டனர்.

இதன்போது யாழ். அரச அதிபர் மகேசன தெரிவிக்கையில்,

தற்போது நாட்டில் அமுல்படுத்தப்பட்டுள்ள பயணத்தடைக்காலத்தில் ஒருசிலர் அலட்சியமாக நடந்துகொள்வதனால் கொரோனா அபாயநிலை மேலும் அதிகரிக்க வாய்ப்பிருக்கின்றது

யாழ். மாவட்ட கட்டளைத் தளபதியின் வழிகாட்டுதலில் இராணுவத்தினரால் நாவற்குழி உணவுக் களஞ்சியத்தின் ஒரு பகுதி கொரோனா நோயாளர்களைப் பராமரிப்பதற்கான நிலையமாக மாற்றப்பட்டுள்ளது. உணவுக் களஞ்சியத்தில் பயன்படுத்தாமல் இருந்த ஒரு பகுதி மாத்திரமே தற்போது 200 படுக்கைகளுடன் கூடிய கொரோனா சிகிச்சை நிலையமாக மாற்றப்பட்டுள்ளது. மேலும் தேவை ஏற்படின் உணவுக் களஞ்சியத்தின் மற்றொரு பகுதியும் இவ்வாறு கொரோனா நோயாளர்களைப் பராமரிப்பதற்கான நிலையமாக மாற்றப்படும். அவ்வாறான நிலைமையில் நாவற்குழியில் 400 கொரோனா தொற்றாளர்களைப் பராமரிக்க முடியும்.

யாழ். மாவட்டத்தில் தற்போது 820 கொரோனா நோயாளர்களை பராமரிக்கக்கூடிய நிலை காணப்படுகிறது. உணவுக் களஞ்சியத்தின் மற்றைய பகுதியும் சீர்செய்யப்படும் பட்சத்தில் 1200 தொற்றாளர்களை வைத்து பராமரிக்க முடியும். தற்போது கோப்பாய் கொரோனா சிகிச்சை நிலையம் 400 நோயாளர்களையும், வட்டுக்கோட்டையில் 220 நோயாளர்களையும் வைத்து பராமரிக்கக்கூடிய நிலை காணப்படுகிறது.

யாழில் தொற்று அபாயம் சற்று தணிந்து வருவதனை உணர முடிகிறது. திங்கட்கிழமை மாவட்டத்தில் 17 பேருக்கு தொற்று உறுதிசெய்யப்பட்டுள்ளது. இதுவரை யாழ். மாவட்டத்தில் 58 கொரோனா மரணங்கள் பதிவாகியுள்ளன.

நாம் அனைவரும் இக்காலகட்டத்தை மிக அவதானமாகக் கடக்க வேண்டும். பயணத்தடைக்காலத்தில் ஒருசிலர் அலட்சியமாக நடந்துகொள்வதனால் மேலும் அபாயம் அதிகரிக்க வாய்ப்புள்ளது. அனைவரும் ஒன்றுசேர்ந்து எதிர்த்தால்தான் கொரோனாவை வெற்றிகொள்ள முடியும்.

வடமாகாணத்தில் கொரோனா தொற்றை ஒழிக்க வடமாகாண ஆளுநர் மற்றும் யாழ். மாவட்ட அபிவிருத்தி ஒருங்கிணைப்புக் குழுத் தலைவர் ஆகியோரின் வழிகாட்டுதல் மற்றும் ஆலோசனைகள் உதவியாக இருக்கின்றன – என்றார்.





# வவுனியா ஆடைத் தொழிற்சாலையில் பணிபுரியும் 15 பேர் உட்பட 35 பேருக்கு கொவிட் தொற்று உறுதி

(வவுனியா நிருபர்)

வவுனியாவில் ஆடைத்தொழிற்சாலையில் பணிபுரியும் 15 பேர் உட்பட 35 பேருக்கு கொவிட் தொற்று உறுதிசெய்யப்பட்டுள்ளது.

வவுனியாவில் இனங்காணப்பட்ட கொவிட் தொற்றாளர்களுடன் தொடர்புகளைப் பேணியவர்கள், வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டவர்கள் மற்றும் எழுமாறாக மேற்கொள்ளப்பட்ட பிசிஆர் பரிசோதனையின் முடிவுகள் நேற்று முன்தினம் இரவு வெளியாகின.

அதில், தோணிக்கல் பகுதியில் ஐந்து பேருக்கும், கற்பகபுரம் பகுதியில் நான்கு பேருக்கும், பட்டானிச்சூர் பகுதியில் ஒருவருக்கும், சிறிராமபுரம் பகுதியில் ஒருவருக்கும், சமயபுரம் பகுதியில் ஒருவருக்கும், ஈஸ்வரிபுரம் பகுதியில் ஒருவருக்கும், மதியாமடு பகுதியில் ஒருவருக்கும், பெரியஉளுக்குளம் பகுதியில் இருவருக்கும், உளுக்குளம் பகுதியில் மூவருக்கும், கற்குழி பகுதியில் இருவருக்கும், வேப்பங்குளம் பகுதியில் இருவருக்கும், பனிக்கர் புளியங்குளம் பகுதியில் ஒருவருக்கும், நெளுக்குளம் பகுதியில் ஒருவருக்கும், பூந்தோட்டம் பகுதியில் ஒருவருக்கும், நீலியாமோட்டை பகுதியில் ஒருவருக்கும், சுந்தரபுரம் பகுதியில் ஒருவருக்கும், போகஸ்வேவ பகுதியில் ஒருவருக்கும், கற்குளம் பகுதியில் ஒருவருக்கும், கனகராயன்குளம் பகுதியில் ஒருவருக்கும், மடுக்குளம் பகுதியில் ஒருவருக்கும், மடு வீதியில் இருவருக்கும், தனிமைப்படுத்தப்பட்டிருந்த தொற்று இனங்காணப்பட்ட கர்ப்பிணிப் பெண்ணுடன் தொடர்பை பேணிய குடும்பநல உத்தியோகத்தரான பூவரசன்குளம் பகுதியில் ஒருவருக்கும் என 35 பேருக்கு கொவிட் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

இதில், வேப்பங்குளம், பனிக்கர் புளியங்குளம், நெளுக்குளம், பூந்தோட்டம், நீலியாமோட்டை, சுந்தரபுரம், போகஸ்வேவ, கற்குளம், கனகராயன்குளம், மடுக்குளம், மடு வீதி, கற்குழி ஆகிய பகுதிகளில் இனங்காணப்பட்ட 15 தொற்றாளர்களும் ஆடைத் தொழிற்சாலையில் பணிபுரிபவர்களாவர்.

தொற்றாளர்களை கொரோனா சிகிச்சை நிலையத்திற்கு அனுப்பிவைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதுடன், அவர்களுடன் தொடர்புடையவர்களை தனிமைப்படுத்தவும் சுகாதாரப் பிரிவினர் நடவடிக்கை எடுத்துள்ளனர்.

# யாழில் மேலும் 3 பேர் கொரோனாவால் உயிரிழப்பு

**கொரோனா தொற்றுக்குள்ளான மேலும் 3 பேர் யாழ்ப்பாணத்தில் உயிரிழந்துள்ளதாக யாழ். போதனா வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.**

**அதனடிப்படையில் நேற்று முன்தினம் இரண்டு மரணங்களும் நேற்று ஒரு மரணமும் இடம்பெற்றுள்ளன.**

**புத்தூரைச் சேர்ந்த 48 வயதுடைய ஆர்.கிருஷ்ணபாபு, சுழிபுரத்தைச் சேர்ந்த 57 வயதுடைய ஆர். சின்னப்பிள்ளை ஆகியோரும், நேற்று 58 வயதுடைய பெண் ஒருவரும் உயிரிழந்துள்ளனர்.**

# வங்காலை கடற்கரையில் கரையொதுங்கிய உயிரிழந்த கடலாமை



(மன்னார் நகர் நிருபர்)

மன்னார் நானாட்டான் பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட வங்காலை கடற்கரையில் நேற்று செவ்வாய்கிழமை உயிரிழந்த நிலையில் கடல் ஆமை ஒன்று கரையொதுங்கியுள்ளது.

அண்மையில் இலங்கை கடற்பரப்பில் தீப்பற்றிய கப்பலிலிருந்து வெளியேற்றப்பட்ட ஆபத்தான பொருட்கள் என சந்தேகிக்கப்படும் சில பொருட்கள் மன்னார் வங்காலை கடற்கரை மற்றும் சிலாபத்துறை கடங்கரையில் கரையொதுங்கியன.

இந்நிலையில் ஓடுகள் கடுமையாக சிதைவுற்ற நிலையில் ஆமையின் சடலம் கரையொதுங்கியுள்ளது.

# நயினாதீவு கடற்கரையில் மருத்துவக் கழிவுகள்



**நயினாதீவு தெற்கு கடற்கரையில் மருத்துவக் கழிவுகள் கரை ஒதுங்குவதால் மக்கள் அச்சநிலையுடனும் இவை இந்திய மருத்துவக் கழிவுகளா என்ற குழப்ப நிலையிலும் காணப்படுகின்றனர்.**

**வெற்று ஊசிகள், மாத்திரைகள் போன்றவையே கரை ஒதுங்கியுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. சம்பவம் தொடர்பில் நயினாதீவு பொதுச் சுகாதாரப் பரிசோதகருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.**

# பாடசாலைகளின் கொவிட்-19 சுகாதார நடவடிக்கைகளுக்காக


# 681,625,800 ரூபா நிதியொதுக்கீடு



கல்வி என்பது ஒட்டுமொத்த உலக சமூகத்திற்கும் இன்றியமையாததொன்றாகும். இந்தக் கல்வி நாட்டின் பொருளாதார முன்னேற்றத்திற்கும் மிக அத்தியாவசியமாகும்.

மாணவர்கள் இந்தக் கல்வி நடவடிக்கையினை காலா காலமாக நேரடியான கற்றல் வழிமுறையினூடாகவே மேற்கொண்டு வந்துள்ளனர். எனினும் கொவிட் -19 வைரஸ் பரவலிலிருந்து மாணவர்களைப் பாதுகாக்கும் பொருட்டு இந்த கல்வியினை வழங்கும் பாடசாலைகள் 2020ஆம் ஆண்டு பெப்ரவரி நடுப் பகுதியிலிருந்து தொடர்ச்சியாக பல மாதங்கள் மூடப்பட்டிருந்தன.





இக்காலப் பகுதியில் இணையத்தளங்களினூடாக கல்வி நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்ட போதிலும் அது பாரியளவில் வெற்றியளிக்கவில்லை. இதனால் கடந்த வருடம் இறுதியாண்டுப் பரீட்சை நடத்தப்படாமல் அனைத்து மாணவர்களையும் கல்வி அமைச்சு வகுப்பேற்றியது.

எவ்வாறாயினும், 2021ஆம் ஆண்டிலாவது கல்வி நடவடிக்கைகளை சிறந்த முறையில் முன்னெடுக்க வேண்டும் என்ற அடிப்படையில் பல்வேறு சிரமங்களுக்கு மத்தியில் பாடசாலைகளை திறப்பதற்கான நடவடிக்கையினை கல்வி அமைச்சு மேற்கொண்டது. எனினும் கடந்த புதுவருட கொண்டாட்டத்தையடுத்து நாட்டில் ஏற்பட்டுள்ள கொரோனா வைரஸின் மூன்றாவது அலை காரணமாக பாடசாலைகள் மீண்டும் காலவரையறையின்றி மூடப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, இந்த வருடம் முதலாம் தவணைக்காக பாடசாலைகளை திறப்பதற்காக கல்வி அமைச்சினால் 681,625,800.00 ரூபா நிதி நாடளாவிய ரீதியிலுள்ள அனைத்துப் பாடசாலைகளுக்கும் ஒதுக்கப்பட்டுள்ளது.

இந்த விடயம் தகவலறியும் சட்டமூலத்தின் ஊடாக நாட்டிலுள்ள ஒன்பது மாகாண கல்வித் திணைக்களங்களுக்கு சமர்ப்பிக்கப்பட்ட விண்ணப்பங்களின் ஊடாகப் பெற முடிந்தது.

இதேவேளை, கொரோனா வைரஸ் பரவலுக்கு மத்தியில் 2021ஆம் ஆண்டின் முதலாம் தவணைக்கான பாடசாலைகள் கடந்த ஜனவரி 11ஆம் திகதி திறக்கப்பட்டன.

நாடளாவிய ரீதியிலுள்ள 10,116 பாடசாலைகளில் மேல் மாகாணம் தவிர்ந்த ஏனைய எட்டு மாகாணங்களிலுள்ள 7,314 பாடசாலைகளே இதன்போது திறக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

அதேவேளை, மேல் மாகாணத்திலுள்ள 907 பாடசாலைகள் கடந்த ஜனவரி 26ஆம் திகதி கல்விப் பொதுத் தராதர (சாதாரண தர) மாணவர்களுக்காக மாத்திரம் திறக்கப்பட்டன.

எனினும், பாடசாலை மாணவர்கள் மற்றும் அவர்களது பெற்றோர்கள் மத்தியில் பாரிய அச்ச உணர்வொன்று காணப்பட்டது. இதனை நிவர்த்தி செய்யும் வகையில் கல்வி அமைச்சினால் கொவிட்-19 இற்கு எதிரான சுகாதார செயற்றிட்டங்களை செயற்படுத்துவதற்காகவே 681,625,800.00 ரூபா நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

இதில் தென், வட, வடமேல், மத்திய மற்றும் சப்ரகமுவ ஆகிய ஐந்து மாகாணங்களிலுள்ள தேசியப் பாடசாலைகளுக்கு 19,934,440 ரூபாவும், மாகாண பாடசாலைகளுக்கு 363,155,510.00 ரூபாவும் ஒத்துக்கப்பட்டுள்ளது.

ஏனைய நான்கு மாகாணங்களான கிழக்கு, மேல், வட மத்திய மற்றும் ஊவா ஆகியவற்றிலுள்ள தேசிய மற்றும் மாகாண பாடசாலைகளுக்கு ஒதுக்கப்பட்ட நிதி தொடர்பான தகவல்கள் குறித்த மாகாண கல்வி திணைக்களங்களினால் எமது தகவலறியும் விண்ணப்பத்திற்கு வழங்கப்படவில்லை.

பாடசாலையின் மொத்த மாணவர்களின் எண்ணிக்கைக்கு அமையவே கல்வி அமைச்சினால் நிதி வழங்கப்படுகின்றது. கைகழுவும் தொகுதி, மருத்துவ அறை அமைப்பு, தொற்றுநீக்கம் செய்தல், தொற்றுநீக்கி பதார்த்தக் கொள்வனவு, சிரமதான நடவடிக்கை, வெப்பமானி கொள்வனவு, முகக்கவசங்கள், முகத்தடுப்புகள், சவர்க்காரங்கள், நீர்த் தொகுதிகளை புனரமைப்பு செய்தல் போன்ற பல்வேறு சுகாதார தேவைகளுக்காகவே மேற்குறிப்பிட்ட நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

மத்திய அரசாங்கத்தின் கீழுள்ள கல்வி அமைச்சின் 15/2020ஆம் இலக்க சுற்றுநிருபத்திற்கமைய அமைச்சினால் ஒதுக்கப்பட்ட நிதிகள் மாகாணக் கல்வித் திணைக்களத்தினூடாக வலயக் கல்வி அலுவலங்களுக்கு அனுப்பப்பட்டு அவை பாடசாலை அபிவிருத்தி சங்கத்தின் வங்கிக் கணக்கிலக்கத்திற்கு வைப்புச் செய்யப்படுகின்றன.

இதேவேளை, அனுராதபுரம் மாவட்டத்தின் கெப்பிட்டிக்கொல்லாவ (127 பாடசாலைகள்) கலன்பிந்துனுவேவ (95 பாடசாலைகள்), பொலன்னறுவை மாவட்டத்தின் ஹிங்குராங்கொட (54 பாடசாலைகள்), திம்புலாகல (104 பாடசாலைகள்) ஆகிய கல்வி வலயங்களிலுள்ள 380 பாடசாலைகளுக்கு 12,765,000.00 ரூபா நிதி வட மத்திய மாகாண முதலைமைச்சர் அலுவலகத்தினால் ஒதுக்கப்பட்டுள்ளது. இந்த அமைச்சின் கீழ் மாகாணக் கல்வித் திணைக்களம் செயற்படுகின்றது.

எனினும், ஏனைய எட்டு மாகாணங்களிலுள்ள மாகாணக் கல்வி அமைச்சினால் நிதியொதுக்கப்பட்டமை குறித்து எமது தகவலறியும் விண்ணப்பத்திற்கு வழங்கப்படவில்லை.

இதற்கு மேலதிகமாக அனுராதபுரம் மாவட்டத்தின் கொப்பிட்டிக்கொல்லாவ மற்றும் கலன்பிந்துனுவேவ ஆகிய கல்வி வலயங்களிலுள்ள 222 பாடசாலைகளுக்கு 'Plan Sri Lanka' செயற்றிட்டத்தின் கீழ் 26,810,000.00 ரூபா நிதியொதுக்கப்பட்டுள்ளது. அத்துடன் அறநெறிப் பாடசாலைகள் மற்றும் ஆசிரியர் வள நிலையங்கள் போன்றவற்றிற்கும் கல்வி அமைச்சினால் நிதியொதுக்கப்பட்டுள்ளது.

## பாடசாலைகள் மற்றும் நிதியொதுக்கீட்டு விபரங்கள்

| மாகாணக் கல்வி திணைக்களம் | தேசிய பாடசாலைகளுக்கு ஒதுக்கிய நிதி | மாகாண பாடசாலைகளுக்கு ஒதுக்கிய நிதி | மொத்தமாக பாடசாலைகளுக்கு ஒதுக்கிய நிதி |
|---|---|---|---|
| கிழக்கு | - | - | 73,711,850.00 |
| வடக்கு | 1,585,500.00 | 56,125,700.00 | 57,711,200.00 |
| தென் | 6,699,610.00 | 70,898,540.00 | 77,598,150.00 |
| மேல் | - | - | 107,919,250.00 |
| வட மத்திய | - | - | 55,657,650.00 |
| வட மேல் | 3,000,000.00 | 76,912,500.00 | 79,912,500.00 |
| மத்திய | 7,389,050.00 | 96,683,270.00 | 104,072,320.00 |
| சப்ரகமுவ | 1,260,280.00 | 62,535,500.00 | 63,795,780.00 |
| ஊவா | - | - | 61,247,100.00 |
| மொத்தம் | 19,934,440.00 | 363,155,510.00 | 681,625,800.00 |

| மாகாணக் கல்வி திணைக்களம் | மாவட்டங்களின் எண்ணிக்கை | கல்வி வலயங்களின் எண்ணிக்கை |
|---|---|---|
| கிழக்கு | 3 | 17 |
| மத்திய | 3 | 15 |
| வடக்கு | 5 | 12 |
| தென் | 3 | 11 |
| மேல் | 3 | 11 |
| ஊவா | 2 | 10 |
| வட மத்திய | 2 | 08 |
| வட மேல் | 2 | 08 |
| சப்ரகமுவ | 2 | 07 |
| மொத்தம் | 25 | 99 |

| மாகாணக் கல்வி திணைக்களம் | தேசிய பாடசாலைகள் | மாகாண பாடசாலைகள் | மொத்தம் |
|---|---|---|---|
| கிழக்கு | 40 | 1,075 | 1,115 |
| வடக்கு | 22 | 967 | 989 |
| தென் | 67 | 1,040 | 1,107 |
| மேல் | 75 | 1,279 | 1,354 |
| வட மத்திய | 15 | 802 | 817 |
| வட மேல் | 37 | 1,209 | 1,246 |
| மத்திய | 54 | 1466 | 1520 |
| சப்ரகமுவ | 28 | 1092 | 1120 |
| ஊவா | 36 | 862 | 898 |
| மொத்தம் | 374 | 9792 | 10166 |

எமது நாட்டில் காணப்படுகின்ற 25 மாவட்டங்களிலும் 99 கல்வி வலயங்கள் காணப்படுகின்றன. இதில் ஆகக் கூடிய 17 கல்வி வலயங்கள் கிழக்கு மாகாணத்திலும், ஆகக் குறைந்த ஏழு கல்வி வலயங்கள் சப்ரகமுவ மாகாணத்திலும் காணப்படுகின்றன.

இதேவேளை, ஆகக் கூடிய ஏழு கல்வி வலயங்கள் அம்பாறை மாவட்டத்திலும், ஆகக் குறைந்த ஒரு கல்வி வலயம் கிளிநொச்சி மாவட்டத்திலும் காணப்படுகின்றன. அத்துடன் மன்னார், முல்லைத்தீவு, புத்தளம் ஆகிய மாவட்டங்களில் இரண்டு கல்வி வலயங்கள் மாத்திரமே காணப்படுகின்றன.

இதேவேளை, நாடளாவிய ரீதியில் 374 தேசிய பாடசாலைகளும், 9,792 மாகாண பாடசாலைகளும் காணப்படுகின்றன. இதில் ஆகக் கூடிய 1,520 பாடசாலைகள் மத்திய மாகாணத்திலும், ஆகக் குறைந்த 817 பாடசாலைகள் வட மத்திய மாகாணத்திலும் காணப்படுகின்றன.

ஆகக் கூடிய 75 தேசியப் பாடசாலைகள் மேல் மாகாணத்திலும், ஆகக் குறைந்த 22 தேசியப் பாடசாலைகள் வட மாகாணத்திலும் காணப்படுகின்றன. அத்துடன் ஆகக்கூடிய 1,466 மாகாண பாடசாலைகள் மத்திய மாகாணத்திலும், ஆகக் குறைந்த 802 மாகாண பாடசாலைகள் வட மத்திய மாகாணத்திலும் காணப்படுகின்றன.

மேற்குறிப்பிட்ட அனைத்து விடயங்களும் தகவலறியும் சட்ட மூலத்தினூடாக நாட்டிலுள்ள ஒன்பது மாகாண கல்வி திணைக்களங்களுக்கு சமர்ப்பிக்கப்பட்ட தகவலறியும் விண்ணப்பங்களினூடாக பெறப்பட்டமை குறிப்பிடத்தக்கதாகும்.

**றிப்தி அலி**





# இலங்கை சுற்றுப்பயணத்தில் டிராவிட்தான் தலைமை பயிற்றுவிப்பாளர்
## – பி.சி.சி.ஐ. தலைவர் கங்குலி

ஷிகர் தவான் தலைமையிலான இந்திய கிரிக்கெட் அணியானது, இலங்கைக்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டு மட்டுப்படுத்தப்பட்ட ஓவர்கள் கொண்ட ஒருநாள் மற்றும் இருபதுக்கு 20 தொடர்களில் தலா 3 போட்டிகள் வீதம் விளையாடவுள்ளது. குறித்த தொடரானது அடுத்த மாத நடுப்பகுதியில் ஆரம்பமாகவுள்ள நிலையில், தொடரில் பங்கேற்கும் இந்திய அணியின் குழாம் அண்மையில் அறிவிக்கப்பட்டிருந்தது.

விராட் கோஹ்லி தலைமையிலான மற்றுமொரு இந்திய கிரிக்கெட் அணி, இங்கிலாந்து அணியுடன் 5 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் குறித்த காலப்பகுதியில் விளையாடுவதால் இளம் வீரர்களைக்கொண்ட ஷிகர் தவான் தலைமையிலான அணி இலங்கைக்கு சுற்றுப்பயணம் மேற்கொள்கிறது.

இந்திய அணியின் வழமையான தலைமைப் பயிற்றுவிப்பாளரான ரவி சாஸ்திரி இங்கிலாந்து சுற்றுப்பயணத்தில் இணைவதன் காரணமாக இலங்கை சுற்றுப்பயணத்தில் இந்திய அணியின் தலைமை பயிற்றுவிப்பாளராக இந்திய அணியின் முன்னாள் தலைவரும், நட்சத்திர துடுப்பாட்ட வீரருமான ராகுல் டிராவிட் செயற்படுவார் என தகவல்கள் வெளியாகி வந்த நிலையில், அவர்தான் இலங்கை சுற்றுப்பயணத்தின்போது இந்திய அணியின் தலைமைப் பயிற்றுவிப்பாளராக செயற்படுவார் என இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபையின் தலைவர் சௌரவ் கங்குலி உத்தியோகபூர்வமாக அறிவித்துள்ளார்.

ராகுல் டிராவிட் இந்திய இளையோர் (U-19) அணியின் தலைமை பயிற்றுவிப்பாளராக செயற்பட்டுள்ளதுடன், இந்திய ஏ அணியின் தலைமை பயிற்றுவிப்பாளராகவும் செயற்பட்டுள்ளார். தற்போது தேசிய கிரிக்கெட் அகடமியின் தலைவராக செயற்பட்டுவரும் ராகுல் டிராவிட் முதல் தடவையாக இந்திய தேசிய அணியின் தலைமை பயிற்றுவிப்பாளராக செயற்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# ஐ.சி.சி. உலக டெஸ்ட் சம்பியன்ஷிப்
## சம்பியனாகும் அணிக்கு 1.6 மில்லியன் டொலர் பணப்பரிசு



டெஸ்ட் போட்டிகளுக்கு உயிரூட்டும் வகையில் கடந்த 2019ஆம் ஆண்டு சர்வதேச கிரிக்கெட் பேரவையினால் புதிதாக அறிமுகப்படுத்தப்பட்ட முதலாவது ஐ.சி.சி. உலக டெஸ்ட் சம்பியன்ஷிப் தொடரின் இறுதிப் போட்டி எதிர்வரும் வெள்ளிக்கிழமை இங்கிலாந்தின் சவுதம்டணில் ஆரம்பமாகிறது. 9 அணிகள் பங்கேற்ற டெஸ்ட் சம்பியன்ஷிப் தொடர் கடந்த இரண்டு வருடங்களாக நடைபெற்றுவந்த நிலையில், இறுதிப் போட்டியானது எதிர்வரும் வெள்ளிக்கிழமை முதல் செவ்வாய்க்கிழமை வரை நடைபெறவுள்ளது.

சர்வதேச கிரிக்கெட் பேரவையினால் நடத்தப்படுகின்ற தொடர்களுக்கு சம்பியன் கிண்ணத்துடன், பணப்பரிசும் வழங்கப்படுகிறது. அந்த அடிப்படையில் டெஸ்ட் சம்பியன்ஷிப் தொடரில் சம்பியனாகும் அணிக்கு 1.6 மில்லியன் டொலர் வழங்கப்படவுள்ளதாக சர்வதேச கிரிக்கெட் பேரவை அறிவித்துள்ளது. அத்துடன், இரண்டாவது இடத்தைப் பிடிக்கும் அணிக்கு, அதாவது இறுதிப் போட்டியில் தோல்வியைத் தழுவும் அணிக்கு 8 இலட்சம் அமெரிக்க டொலர் வழங்கப்படவுள்ளது.

இதேவேளை, டெஸ்ட் சம்பியன்ஷிப் தொடரின் புள்ளிப்பட்டியலின் அடிப்படையில் மூன்றாவது இடத்தைப் பிடிக்கும் அணிக்கு 4 இலட்சத்து 50 ஆயிரம் டொலரும், நான்காமிடத்தை இடத்தைப் பிடிக்கும் அணிக்கு 3 இலட்சத்து 50 ஆயிரம் டொலரும், ஐந்தாவது இடத்தைப் பிடிக்கும் அணிக்கு 2 இலட்சம் டொலரும் வழங்கப்படவுள்ளது. மேலும் டெஸ்ட் சம்பியன்ஷிப் தொடரில் பங்குபற்றிய ஏனைய நான்கு அணிகளுக்கும் தலா ஒரு இலட்சம் டொலர் வீதம் வழங்கப்படவுள்ளது.




# டெஸ்ட் சம்பியன்ஷிப் இறுதிப்போட்டிக்கான நியூஸிலாந்து குழாம் அறிவிப்பு

ஐ.சி.சி. உலக டெஸ்ட் சம்பியன்ஷிப் தொடரின் மாபெரும் இறுதிப்போட்டி இன்னும் இரு நாட்களில் ஆரம்பமாகவுள்ள நிலையில், குறித்த இறுதிப்போட்டியில் பங்கேற்கும் கேன் வில்லியம்சன் தலைமையிலான நியூஸிலாந்து அணியின் 15 பேர் கொண்ட குழாம் நேற்று வெளியிடப்பட்டது.

இங்கிலாந்து அணியுடன் இரு தினங்களுக்கு முன்னர் நிறைவடைந்த இரண்டாவது டெஸ்ட் போட்டியில் விளையாடாத நியூஸிலாந்து அணியின் தலைவர் கேன் வில்லியம்சன் மற்றும் விக்கெட் காப்பாளர் பி.ஜே வெட்டிங் ஆகியோர் மீண்டும் அணிக்கு திரும்பியுள்ளனர்.

விக்கெட்காப்பாளர் பி.ஜே. வெட்டிங் இந்தப் போட்டியுடன் டெஸ்ட் அரங்கிற்கு விடைகொடுக்கவுள்ளார்.



**நியூஸிலாந்து அணியின் குழாம்**

*கேன் வில்லியம்சன் (அணித்தலைவர்), டொம் ப்ளுன்டெல், ட்ரெண்ட் போல்ட், டிவோன் கோன்வே, கொலின் டி க்ரெண்ட்ஹோம், மெட் ஹென்றி, கெயில் ஜமிசன், டொம் லேதம், ஹென்றி நிக்கொலஸ், அஜாஸ் பட்டேல், டிம் சௌத்தி, ரோஸ் டைலர், நைல் வேக்னர், பி.ஜே வெட்டிங், வில் யங்*




# சாய்ந்தமருது கிரிக்கெட் சங்கத்தின் பொதுக்கூட்டமும், புதிய நிர்வாகத் தெரிவும்

*(நூருல் ஹுதா உமர்)*

சாய்ந்தமருது கிரிக்கெட் சங்கத்தின் பொதுக்கூட்டமும் 2021-2022ஆம் ஆண்டுக்கான புதிய நிர்வாகத் தெரிவும், தொழில்நுட்ப செயலியினூடாக அண்மையில் நடைபெற்றது. புதிய நிர்வாகத் தலைவராக சஹரியன் வி. கழகத்தின் எம்.எச்.ஏ.கால்தீன் தெரிவுசெய்யப்பட்டார். மேலும் செயலாளராக எலவன் ஹீரோஸ் வீரர் இல்யாஸ் அஸீஸும், பொருளாளராக விளாஸ்டர் வி. கழக வீரர் எம்.ஜெ.எம்.தாஜுதீனும், தவிசாளராக ஏஜ் ஸ்டீல் வி.கழக வீரர் எஸ். றிழ்வானும் தெரிவுசெய்யப் பட்டனர்.

இந்தக் கூட்டத்தில் சாய்ந்தமருது விளையாட்டு உத்தியோகத்தர் எஸ்.சபூர்தீன், கிழக்கு மாகாண கிரிக்கெட் பயிற்றுவிப்பாளர் சித்தார்த் லியனாராய்ச்சி, அம்பாறை மாவட்ட விளையாட்டு பயிற்றுவிப்பாளர் எம்.பி.எம்.றஜாய் உட்பட பிராந்திய கழகங்களின் நிர்வாகிகள் பலரும் கலந்துகொண்டிருந்தனர்.

SAINTHAMARUTHU CRICKET ASSOCIATION
SINCE 2020

# பிரிட்டனில் பொதுமுடக்கம் நீடிப்பு




பிரிட்டனில் கொரோனா தொற்று பரவலைக் கட்டுக்குள் கொண்டுவருவதற்காக அமுல்படுத்தப்பட்டுள்ள பொது முடக்கம் மேலும் 4 வாரங்களுக்கு நீடிக்கப்படும் என அந்நாட்டுப் பிரதமர் பொரிஸ் ஜோன்சன் திங்கட்கிழமை அறிவித்துள்ளார்.

பிரிட்டனில் டெல்டா வகை கொரோனா தீநுண்மி பரவல் அதிகரித்ததையடுத்து அங்கு பொது முடக்கம் அமுல்படுத்தப்பட்டது. 4 நிலைகளாக அமுல்படுத்தப்பட்ட பொது முடக்கம் எதிர்வரும் 21ஆம் திகதியுடன் முடிவடைவதாக இருந்தது.

ஆனால், பிரிட்டனில் கொரோனா தொற்று பரவல் கட்டுக்குள் கொண்டுவரப்படாததால் பொது முடக்கம் ஜூலை 19ஆம் திகதிவரை நீடிக்கப்பட்டுள்ளதாக பிரதமர் பொரிஸ் ஜோன்சன் தெரிவித்துள்ளார். அதற்கு மேலும் பொது முடக்கத்தை நீடிக்கவேண்டிய அவசியம் ஏற்படாது எனவும் அவர் கூறியுள்ளார்.

டெல்டா வகை கொரோனா தீநுண்மி குறித்த ஆய்வில் ஈடுபடுவதற்கு விஞ்ஞானிகளுக்குப் போதிய காலஅவகாசம் வழங்கும் வகையில் பொது முடக்கம் நீடிக்கப்படுவதாக மூத்த அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

பிரிட்டனில் கொரோனா தொற்றால் பாதிக்கப்படுவோர் எண்ணிக்கை, முந்தைய வாரத்துடன் ஒப்பிடுகையில் கடந்த வாரத்தில் 49 சதவீதம் அதிகரித்துள்ளது. தொற்று பரவல் தொடர்ந்து அதிகரித்து வருவதால் பிரிட்டனில் எதிர்வரும் வாரங்களில் மருத்துவமனைகளில் சிகிச்சை பெறும் நோயாளிகளின் எண்ணிக்கை அதிகரிக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

அதேவேளை, கொரோனா தடுப்பூசி திட்டத்தை துரிதப்படுத்துவதற்கான நடவடிக்கைகளையும் பிரதமர் பொரிஸ் ஜோன்சன் தலைமையிலான அரசு மேற்கொள்ளவுள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

# கொரோனாவின் கோரத் தாண்டவம்:
## பெற்றோரை இழந்து பச்சிளம் தம்பியுடன் தவிக்கும் சிறுமி



**கொரோனாவின் கோர முகத்துக்கு எல்லையே இல்லை. அது நாள்தோறும் பல்வேறு இடங்களில் தனது கோரத் தாண்டவத்தை ஆடிக்கொண்டேயிருக்கிறது.**

**இந்தியா, ஒடிசா மாநிலம் பாலாசோர் பகுதியைச் சேர்ந்த சிறுமி கிருஷ்ணாவுக்கு இந்தக் கொரோனா வைரஸ் மரணத்தை விடவும் கொடிய கொடுமையை நிகழ்த்திவிட்டுச் சென்றுள்ளது.**

**சில மாதங்களுக்கு முன்புவரை மற்ற சிறுமிகளைப் போலத்தான் இவரும் விளையாடி, ஒன்லைனில் கல்வி பயின்று வந்துள்ளார். ஆனால், இதெல்லாம் ஏப்ரல் 9ஆம் திகதி வரைதான். மருத்துவமனை தாதியான அவரது அம்மா ஸ்மிதா, 9 மாத கர்ப்பிணியாக இருந்த நிலையில் கொரோனா உறுதிசெய்யப்பட்டது.**

**கட்டாக்கிலுள்ள தனியார் மருத்துவமனையில் அவருக்கு ஆண் குழந்தை பிறந்தது. ஆனால், குழந்தை பிறந்த 7 நாட்களில் மே 2ஆம் திகதி ஸ்மிதா கொரோனாவுக்கு பலியானார்.**

**தனது பெண் குழந்தை மற்றும் புதிதாக பிறந்த ஆண் குழந்தையுடன் சொந்த கிராமத்துக்குத் திரும்பினார் ரயில்வே ஊழியரான கமலேஷ். ஆனால், விதி அங்கும் அவர்களை விடவில்லை. ஒரு வாரத்துக்குப் பின் கமலேஷ் கொரோனா பாதித்து மருத்துவமனையில் அனுமதிக்கப்படுகிறார். அங்கு 15 நாட்களுக்குப் பின் சிகிச்சை பலனின்றி ஜூன் 9ஆம் திகதி கமலேஷ் உயிரிழந்தார்.**

**கொரோனாவுக்கு பெற்றோரை இழந்து, கையில் பச்சிளம் தம்பியுடன் உறவினர் தெபசிஸ் வீட்டுக்கு வந்துள்ளார் கிருஷ்ணா. கூலித் தொழிலாளியான தெபசிஸ், தனது குடும்பத்தை நடத்தவே வழி தெரியாமல் அவதிப்பட்டுவரும் நிலையில், இந்த குழந்தைகளைப் பராமரிக்க வழி தெரியாமல், அரசின் உதவியைக் கோரியுள்ளார்.**

# உலக சனத்தொகையில் 12 வீதமானோருக்கே கொரோனா வைரஸ் தடுப்பூசி கிடைத்துள்ளது
## உலக சுகாதார ஸ்தாபனம் வேதனை

உலக மக்கள் தொகையில் இதுவரை வெறும் 12 சதவீதமானோருக்கே கொவிட் தடுப்பூசி செலுத்தப்பட்டுள்ளதாக புள்ளிவிவரங்கள் தெரிவிக்கின்றன.

உலக நாடுகளில் ஜூன் 10ஆம் திகதி நிலைவரப்படி கொவிட் தடுப்பூசி செலுத்தியிருப்பவர்களின் புள்ளிவிவரங்கள் வெளியாகியுள்ளன. அதில், ஒட்டுமொத்த உலக மக்கள் தொகையில் இதுவரை 12 சதவீதம் பேருக்கு மட்டுமே கொவிட் தடுப்பூசியின் முதல் தவணை செலுத்தப்பட்டுள்ளமை தெரியவந்துள்ளது. அதாவது, ஒட்டுமொத்த உலக மக்கள் தொகையில் 93.20 கோடி பேர் தடுப்பூசி செலுத்திக் கொண்டுள்ளனர்.

அதிகபட்சமாக இஸ்ரேலில் 63.1 சதவீதம் பேருக்கு தடுப்பூசி போடப்பட்டுள்ளது. இதையடுத்து கனடாவில் 62.7 சதவீதம் பேருக்கு தடுப்பூசி செலுத்தப்பட்டுள்ளது. பிரிட்டனில் 62.7 சதவீதமாகவும் அமெரிக்காவில் இது 51.4 சதவீதமாகவும் உள்ளது. இந்தியாவில் 13.7 சதவீதம் பேருக்கு தடுப்பூசி போடப்பட்டுள்ளது.

உலகம் முழுவதும் கொவிட் தடுப்பூசி போடும் பணி தீவிரமாக நடைபெற்று வருகிறது. ஆனால், ஒரு நாளில் தடுப்பூசி போடும் எண்ணிக்கையை விட, மிக அதிக வேகத்தில் தொற்று பரவி வருகிறது. ஏழை நாடுகளில் தடுப்பூசி தட்டுப்பாடு நீடிக்கிறது. அனைத்து மக்களுக்கு தடுப்பூசி கிடைத்தால் மட்டுமே கொவிட் பெருந்தொற்றிலிருந்து மீள முடியும் என உலக சுகாதார ஸ்தாபனம் தெரிவித்துள்ளது.

# அதிக திறனுள்ள தடுப்பூசி 'நொவாவாக்ஸ்' அறிவிப்பு




கொரோனா தடுப்பூசி தயாரிக்க சீரம் நிறுவனத்துடன் ஒப்பந்தம் செய்துள்ள அமெரிக்காவைச் சேர்ந்த நொவாவாக்ஸ் நிறுவனம் தங்களின் தடுப்பூசி 90.4 சதவீத செயல்திறன் உள்ளதாக அறிவித்துள்ளது.

கொவிஷீல்ட் மற்றும் கொவாக்சின் தடுப்பூசிகள் இந்தியாவில் தற்போது பயன்பாட்டில் உள்ளன. இந்நிலையில், தடுப்பூசியை தயாரிப்பதற்காக சீரம் நிறுவனத்துடன் அமெரிக்காவைச் சேர்ந்த நொவாவாக்ஸ் நிறுவனம் ஒப்பந்தம் செய்துள்ளது. அமெரிக்கா மற்றும் மெக்சிகோவில் 119 இடங்களில் 30 ஆயிரம் பேரிடம் பரிசோதனை நடத்தப்பட்டது.

அதில் இலேசானது முதல் சற்று தீவிர பாதிப்புக்கு எதிராக 90.4 சதவீத செயல்திறன் கிடைத்துள்ளதாக நிறுவனம் தெரிவித்துள்ளது. ஒட்டுமொத்தமாக மிகச் சிறப்பானதாக இந்தத் தடுப்பூசி உள்ளதாகவும் கூறியுள்ளது. எதிர்வரும் செப்ரெம்பருக்குள் இதை பயன்படுத்துவதற்கான அனுமதி கோரப்படும் என்றும் அடுத்த ஆண்டில் அமெரிக்காவுக்கு 11 கோடி டோஸ் தடுப்பூசிகளும் உலகெங்கும் 110 கோடி டோஸ் தடுப்பூசிகளும் விநியோகிக்க முடியும் என்றும் நிறுவனம் நம்பிக்கை தெரிவித்துள்ளது.

Printed by the Kalukodayawa, Malwana Press & Published by Liberty Publishers (Pvt.) Ltd. 91, Wijerama Mawatha, Colombo 7